விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-1391)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 11 வெள்ளிக்கிழமை (26.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 189

# வெள்ளைக் கொடி விவகாரம் ஐ.நாவில் சாட்சியம் பதிவு!

## கண்ணீரில் நனைந்தது ஐ.நா சபை



(நியூயோர்க்)

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசனின் மகன், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவனின் மனைவி மற்றும் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் மலரவனின் மனைவி ஆகியோர் ஐ.நாவில் சாட்சியம் அளித்துள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முதல்வர் அமெ.விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடுத்த மாதம் அமெரிக்காவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள கலாசார நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காகவே அவர் எதிர்வரும் ஜூலை மாதத்தின் முதல வாரத்தில் அமெரிக்கா விற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு முதல்வராக அவர் சத்திய பிரமாணம் செய்து கொணடதன் பின்னர் அவரது முதலாவது அமெரிக்க விஜயம் இதுவாகும்.

இவ்விஜயத்தின் போது வடக்கு முதலமைச்சர் அமெரிக்காவின் சில உயர் அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவின் தமிழ்சட்டத்தரணிகள் அமைப்பு ஒன்றும் தங்கள் நாட்டுகது விஜயம் செய்யுமாறு விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (எ-11)

## மாணவர்கள் இன்று எதிர்ப்புப் பேரணி

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருட்களின் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள் எதிர்ப்பு பேரணி ஒன்றிற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் போதை பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளதுடன் மாணவர்களும் அதனை பாவனை செய்து வருகின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அனைத்து பாடசாலை மாணவர்களும் இன்று இப் பேரணி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11)

## புலிகளின் அச்சுறுத்தல் இலங்கையில் ஏற்படவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பில் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு குறித்து நாம் தொடர்ந்தும் அவதானமாக இருக்கின்றோம். சிலர் குறிப்பிடுவது போன்று இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் ஏற்படவில்லை.

இலங்கையின் புலனாய்வாளர்கள் இது தொடர்பான தகவல்களை திரட்டி கொடுத்துள்ளனர். நாம் இது தொடர்பில் 23ஆம் பக்கம் பார்க்க....

## 20ஆவது திருத்தம் நிறைவேறாமல் பாராளுமன்ற கலைப்பு இல்லை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தின் 20வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை நாடாளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

19-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற பலரிடம் அக்கறை காணப்பட்டது. ஆனால், 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதும் அரசாங்கத்தின் எதிர்ப் பார்ப்பாகும்.

முன்னாள் ஜனாதிபதிக்கு தற்போதைய ஜனாதிபதி பயன்படுத்தும் வீடு வழங்கப்படும். அந்த வீடு தற 23ஆம் பக்கம் பார்க்க....

## வெளியேறினார் பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சிகிச்சை முடிந்து நேற்று முற்பகல் 11.00 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அவரது சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின் போது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பசில் ராஜபக்ஷ எதிர்வரும் நாட்களில் நேரடியான அரசியலில் ஈடுபடுவார் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-11)

## மிருசுவிலில் 2000 ஆம் ஆண்டு

# 8 பேரைக் கொலை செய்த சிப்பாய்க்கு மரண தண்டனை



(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் எட்டுபேரை கொன்ற இராணுவ சிப்பாய்க்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி எட்டு பொது மக்களை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்த இராணுவ சிப்பாய்க்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது. 2000ஆம் ஆணடு டிசம்பர் மாதம் 19-ம் திகதி மிருசுவில் பகுதியில் எட்டு பொதுமக்களை கொலை செய்து மேலும் ஒரு நபருக்கு காயங்களை ஏற்படுத்தியதாக இராணு 23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் நிதி வலையமைப்பை பலவீனப்படுத்தும் அரசு!

### அமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் நிதி ஆதார வலையமைப்புகளை பலவீனப்படுத்துவதற்காக இலங்கை முன்னர் இணைந்து பணியாற்றிய நாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அமெரிக்க இராஜாங்கத்திணைக் 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி

மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட
ஏதாவது ஆதனங்களிற்கு
(குடியிருப்புக்கள் , ஏனைய நிறுவனங்கள்)
முன்பாக கழிவுகள் காணப்படின் குறித்த
ஆதன உரிமையாளருக்கு 01-07-2015
இலிருந்து குறைந்தபட்ச தண்டப்பணமாக
ரூபா 1000.00 அறவிடப்படும்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

★ ஜேர்மன்,சுவிஸ் டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் பல வருடங்களாக ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.

★ கடந்த பரீட்சையில் 60 புள்ளிகளில் இருந்து 75 வரையான புள்ளிகள் பெற்று ஏழு மாணவர்கள் சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கது.

புதிய பிரிவுகள் சனி , ஞாயிறுகளில் ஆரம்பமாக உள்ளன.

தொடர்புகளுக்கு:- 0779707322
கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி,
ஆரியகுளச் சந்தி.
(புத்தர் விகாரைக்கு எதிரே)

(944)

## உங்களுக்கான உடனடி வேலைவாய்ப்புக்கள்

ஜேம், டொபி, பிஸ்கட், பால்மா, சொக்லெட், ஐஸ்கிறீம் போன்ற பிரிவுகளுக்கு
ஆண், பெண் வயது (18-50)
உணவு, தங்குமிடம் இலவசம்.
மாதாந்த சம்பளம் (25000-40000) வரை
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
உங்கள் விருப்பப்படி (நாட்சம்பளம், கிழமை சம்பளம்
பெற்றுக் கொள்ளலாம்)
நாட் சம்பளம் (1500.00)
தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0789419997, 0770153922, 0755438803

(948)


## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம் :- 07**
**ஆதன இலக்கம் : 108/7 (புதியபதிவு)**
**யாழ் மானிப்பாய் வீதி**

வட்ட்ாரம் 07 யாழ் மானிப்பாய் வீதி, ஆதன இலக்கம் 108/17 (புதியபதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், பிரதேச சபை மானிப்பாய் (வலி தென் மேற்கு) கிராமசேவையாளர் பிரிவு ஜே/133 "நாலுவராக்காடும் அழகனடைப்பும்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 14.85 கொண்ட இவ்வாதனமானது 4ஆம் கட்டை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைரட்ணம் கைம்பெண் அக்கிநேசம்மா ஆகிய இவரால் அறுதி உறுதி மூலம் விக்டர் ஜெயராசா பெண ஜெயரூபவதி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.எம்.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 5990 ஆம் இலக்க 2003.06.22 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "நாலுவராக்காடும் அழகனடைப்பும்" நிலப்பரப்பு 01 குளி 14.85 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ஜெயராசா பெண் ஜெயரூபவதி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

(953)






# மானிப்பாய் பொலிஸ் அதிரடி; திருட்டுக் கும்பல் மாட்டியது

*(யாழ்ப்பாணம்)* பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் மற்றும் பணத்துடன் திருட்டுக்கும்பல் ஒன்றினை நேற்றுக் காலை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகேஸ் தெரிவிக்கையில், கடந்த ஏப்ரல் மாதம் 25-ம் திகதி மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு வரும்போது பல்கலைக்கழக மாணவர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகினர். இதனையடுத்து 11 பேர் சம்பவத்துடன் தொடர்புடைய வர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளனர்

அவர்களது வாக்குமூலத்தின் அடிப்படையில் பலர் தேடப்பட்டு வருகின றனர். அதில் சம்பந்தப்பட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படை யில் அவர் திருட்டுக்கும்பலுடனும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்துடன் இவரது தொலைபேசி அழைப்புக்களின் பிரகாரம் இடம் பெற்ற விசாரணையிலும் திருட்டுக் கும்பலுடன் தொடர்பு உள்ளவர் என்பது நிருபணமாகியது. அதனடிப்படையில் கிளிநொச்சி சாந்தபுரம் மற்றும் உருத்திரபுரத்தில் 7 பேரடங்கிய திருட்டுக் கும்பல் ஒன்றினை நேற்று அதிகாலை கைது செய்துள்ளோம்.

அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள்- 4, கமரா -3, சங்கிலி -1, காப்பு -1 சோடி, ஐ.பாட் -2 தொலைபேசிகள் -4, வாள் -1 மற்றும் 6 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் திருட்டுப் போயிருந்த பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டவையாகும். மேலும் அவர்களிடம இருந்து மீட்கப்பட்ட பணம் எவ்வாறு கிடைக் கப் பெற்றது என்றும் விசாரணைகள் தொடர் கின்றது. இவ்வாறு கிளிநொச்சியை சேர்ந்த ஒருவர், கட்டுடையை சேர்ந்த 3 பேரும், சங்கா னையைச்சேர்ந்த 2 பேரும்மானிப்பாயை சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் பலர் குறித்த திருட்டுக் கும்பலுடன் தொடர்புடையவர்கள் என்றும் விசாரணையில தெரியவருகின்றது. அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர். இது தொடர்பிலான விசா ரணைகள் தொர்டர்ந்தும் நடைபெறும் என்றார்.

குறித்த நபர்கள் 7பேரும் மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA வகை SUPER CUB மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
Vijayalanka Exports & Contracts Co.Pvt Ltd.
Point Pedro Road, Puttur East, Puttur.
TEL: 021 205 8999

(946)


## முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கத்தின் பதவி வெற்றிடங்கள்

**பதவி - எழுதுனர்**
சம்பளக் குறி இல - 302/13

சம்பள அளவுத்திட்டம் :- 9950-85x10-90x10-11700 (66/2006 இன்படி மேற்படி சம்பளத் திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 10% சம்பள உயர்வு 30% சம்பள உயர்வு என்பனவும் சேர்த்து வழங்கப்படும்.

வயது 18-45

அ) **தகமைகள்-** கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு(02) வருடங்கள் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத் திட்ட பதவியில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

★ கணனிக் கற்கையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 2015/07/06**

வயதெல்லை கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப படிவம் யாவும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு சான்றிதழ்களின் நிழற்பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
President,
Tccs Union Ltd,
Mullaitivu District .

---

**பதவி- காசாளர்**
சம்பளக் குறி இல - 306/12

சம்பள அளவுத்திட்டம் :- 10200-90x10-100x10-12100 (66/2006 இன் படி)

வயது 18-45

மேற்படி சம்பளத்திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 10% சம்பள உயர்வு 30% சம்பள உயர்வு என்பனவும் சேர்த்து வழங்கப்படும்.

**தகமைகள்:-**

அ) கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத்திட்ட பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட பதவியொன்றில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தி யுடன் கூட்டுறவுச் சங்கமொன்றின் காசாளர் அல்லது விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கைகள் பற்றி நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

★ கணனிக் கற்கையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 2015/07/06**

வயதெல்லை கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் தகைமைச் சான்றிதழ்களின் நிழற்பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்..

**அனுப்ப வேண்டிய முகவரி**
**தலைவர்**
**[illegible] சங்கங்களின் சமாசம்**
**[illegible]**
**ஒட்டுசுட்டான்.**

(C-1394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரியின் நுழைவாயில் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமாவதி செல்வின் நுழைவாயிலை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் சட்டத்தரணி செல்வி. ஞானலோஜினி சிவஞானம் வடபிராந்திய மின்சார சபைப் பொறியியலாளர் எஸ். ஞானகணேசனால் கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# கோஷ்டி மோதல்களுக்குக் களமாக ஆலயங்கள் இருந்து விடக் கூடாது

## பரு. நீதிபதி கணேசராஜா சுட்டிக்காட்டு

(பருத்தித்துறை)

ஆலயங்கள் அமைதிக்கும் அன்புக்கும் உறைவிடமாக திகழவேண்டுமேயொழிய களியாட்டத்திற்கும் கோஷ்டி மோதலுக்கும் களமாக இருக்கக் கூடாதென பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிகண்டி கந்தவனம் ஆலயத்தில் நேற்று நடைபெறவிருந்த இரவு இசைக் கச்சேரிக்கு தடையுத்தரவு பிறப்பித்த போதே நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்ஆலயத்தில்கோஷ்டி மோதல் இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்களை உடன் கைது செய்யுமாறு பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

இந்தவேளை பொலிக ண்டி கந்தவனம் கோவில் திருவிழாவில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறாக ஒலிபெருக்கி களை பயன்படுத்த வேண்டாமென நீதிபதி ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)

# யாழில் திரியபியச வீடமைப்பு திட்டத்தின் கீழ் 45 பயனாளிகளுக்கு காசோலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வீடமைப்பு வாரத்தை முன்னிட்டு வாழ்வின் எழுச்சி திரியபியச வீடமைப்பு திட்டத்தின் கீழ் 45 பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது.

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டு திரியபியச வீடமைப்பு திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இருந்து 300 பயனாளிகள் தெரிவு செய்ய ப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக 15 பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் 3 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய முதற்கட்ட தொகையான 40 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மொத்த தொகையாக 75 ஆயிரம் ரூபா பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

அதில் முதற்கட்டமாக 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வீடமைப்புக்குரிய முதற்கட்ட வேலைகள் பூர்த்தி செய்ததை அதிகாரிகளால் உறுதிப்ப டுத்தப்பட்ட பின் 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அதன் பின்னர் மிகுதி வேலைகள் நிறைவு செய்த பின்னர் 15 ஆயிரம் ரூபா வழங்கப் படும்.

இவர்களுக்குரிய வீட்டுத்திட்ட தொகையினை அவரவர் சமுர்த்தி வங்கி கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படும்.

சமுர்த்தி வங்கிகளில் அவர்கள் பணத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த காசோலை வழங்கும் நிகழ்வில் யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் மேலதிக அரச அதிபர் ப.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்கள பணிப்பாளர் கே. மகேஸ்வரன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் கலந்து கொண்டனர். (இ-9)

# அமைச்சரவை மீது அதிருப்தி-ஹக்கீம்

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தை விடவும் தற்போதைய அமைச்சரவை கடுமையாக நடந்து கொள்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவை விரட்டியடிக்கச் சென்ற நாம் வேறு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையில் எமக்கு பேச இடமளிக்கப்படவில்லை.

கூட்டுப் பொறுப்பு காணப்படுவதனால் இவ்வாறு தடை ஏற்படுத்துவோரை பகிரங்கப் படுத்த முடியவில்லை. இது ஓர் மோசமான நடவடிக்கையாகும்.

தேர்தல் முறைமை மாற்றம் ஒன்றின் போது இதற்கு முன்னர் எப்போதும் அமைச்சரவை எதேச்சாதிகார போக்கில் செயற்பட்டதில்லை.

சில அமைச்சர்கள் சர்வாதிகாரிகளைப் போன்று நடந்துகொள்கின்றார்கள்.

இந்தக் கும்பலிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

20 ஆம் திருத்தச் சட்டம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட முறையை ஏற்றுக்கொள்ள முடியாது.

வர்த்தமானி அறிவித்தலை வெளியிட அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதியின் தேர்தல் வெற்றிக்காக பங்களிப்புச் செய்த சிறு கட்சிகளை அழைத்து பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் நான் கோரினேன். நான் ஜனாதி பதியிடம் கெஞ்சினேன். எனினும் அது நடந்தேறவில்லை.

மறுநாள் நள்ளிரவில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. இது எனக்கு மிகுந்த வேதனையை அளித்தது என ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சண்முகம் விஜயரட்ணம்

மண்ணுலகில் 30 . 04 . 1957



விண்ணுலகில் 07 . 07 . 2014

திதி: 26.06.2015 பூர்வபக்க தசமி

எம் அன்பிற்குரிய ஆருயிர்த் தந்தையே!
மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்று
ஓராண்டு ஆனாலும் எம் விழிகளில் ஈரம் காயவில்லை
நீங்கள் சென்ற தூரம் தெரியவில்லை
காலமோ, நாட்களோ கடந்தாலும்
நீங்கள் எங்களுடன் தான்இருப்பீர்கள் அப்பா!
என்றுமே எமை விட்டுப் பிரியமாட்டீர்கள்

இல.100, கண்ணகைபுரம்,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

– குடும்பத்தினர்

(C-1388)


## ராசி பலன்

26.06.2015
(ஆனி 11, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
நவமி காலை 6.51 மணிவரை
சித்திரை நள்ளிரவு 11.59 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
சர்வதேச போதைப் பொருள்,
நல்லொழுக்க தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | செவ் சூரி |
| | பகல் 11.05 | | குரு சுக் |
| | | | |
| | | சனி | ராகு சந் |

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, குடும்பத்தில் சிறு வாக்குவாதம் ஏற்பட்டு விலகும்.

**மேடம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல்நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சியெடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்திதரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், [illegible] நிலை [illegible] செய்வீர்கள்.


**துலாம்** எதிர்பாராத சில காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

27



மாணவி வித்தியா



மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் 15.06.2015 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

வித்தியாவின் தாய் சரஸ்வதி, சகோதரன் நிசாந்தன், தனியார் பஸ் நடத்துநர், ஊர்காவற்றுறை பொலிஸ் பரிசோதகர், ஊர்காவற்றுறைதலைமைப்பொலிஸ் அதி காரி என ஏழு பேரின் சாட்சியங்கள் வித்தியாவின் மரண விசாரணையின்பொருட்டு பதிவு செய்யப்பட்டன.

**சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியம்**

எஸ்.மயூரன் ஆகிய நான்யாழ்.போதனாவைத தியசாலையில் கடந்த மே மாதம் கடமையில் சேர்ந்தேன். வித்தியா கொலை செய்யப்பட் டமைதொடர்பிலான விசாரணைகளைமேற்கொண்டு வந்தேன்.

உலர்ந்த குருதி மாதிரி,



கழுத்து பகுதியில்இருந்து எடுக்கப்பட்ட சீமென், கண் பகுதியில் காணப்பட்ட திரவம், உட்பட நான்கு திரவ மாதிரிகளை பெற்றதாக கூறிமன்றில் அவற்றை ஒப்ப டைத்தார்.மேலும்கொலை செய்யப்பட்ட மாணவி யின் இரத்த மாதிரி, சந்தேக நபர்கள் ஒன்பது பேரின் இரத்த மாதிரிகள் என்பவற்றையும் மன்றில் சமர்ப்பித்தார்.

**பிரதான பொலிஸ் பரிசோதகர் சாட்சியம்**

டபிள்யூ பி பெரேரா ஆகிய நான் தற்போது மன்னாரில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருகின்றேன். இதற்கு முன்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடைமையாற்றி வந்தேன்.

முதல் மூன்று சந்தேக நபர்களான சகோதரர்களை இக்கொலையின் சந்தேக நபர்களாகக் கைது செய்திருந்தேன்.

கைது செய்த பின்னர் அவர்களது வீட்டினை சோதனையிட்ட போது இருவரின்மேலாடை(சேட்), பனியன் (ரீசேர்ட்) ஆகியவற்றில் இரத்தக்கறை காணப்பட்டது. மற்றொருவரின் இடுப் பின் பின்புறத்தில் இரத்தக் கறை காணப்பட்டது என சாட்சியம்அளித்து அச் சான்று பொருட்களினையும் மன்றில் கையளித்தார்.

**குற்றப்புலனாய்வு துறை அதிகாரி சாட்சியம்**

ஏ.பி.என் நிசாந்த சில்வா ஆகிய தான் 18 வருடங்களாக குற்றப்புலனாய்வு துறை அதிகாரியாக கடமையாற்றி வருகிறேன்.

விசேடமாக கூட்டுக் கொலை தொடர்பில் புலனாய்வு செய்து வருவதாக கூறி குறித்த வழக்கில் ஊர்காவற்றுறை பொலிஸார், சட்டவைத்திய அதிகாரிகளால் முன்வைக்கப் பட்ட சான்று பொருட்களை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத் திற்கு அனுப்பி வைக்கு மாறும் நீதிமன்றில் கேட் டுக்கொண்டார்.



சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளையும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத் திற்கு மரபணு பரிசோதனைக்கு மன்று அனுப்பி வைக்க நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மன்றில் அவர்கேட்டுக்கொண்டார.

குறித்த வழக்கில்15.06.2015 அன்று ஏழு பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட தன் பின்னர் நீதிபதி சந்தேக நபர்களிடம் ஏதும் கூற வுள்ளதா? என கேட்டிருந் தார்.

அதிலொருவர் சம்பவம் நடைபெற்ற போது தான் கடைக்கு சென்ற தாக கூறினார்.

இது விசாரணையின்போது கூறப்பட வேண்டியது என தெரிவித்த நீதி பதி நீங்கள் விரும்பினால் சட்டத்தரணிகளை வைத்து வாதாட முடியும் எனக் கூறினார்.

அதற்கு எமக்கு சட்டத் தரணிகள் யாரும் வருகின்றனர் இல்லை என சந் தேக நபர்கள் கூற, சட்டத் தரணி உங்களுக்கு ஆஜரா குவதை யாரும் தடுத்தால் அதனை மன்றில் தெரியப் படுத்து மாறும் அது தொடர் பில் நடவடிக்கை மேற் கொள் ளப் படும் எனவும் நீதிபதி கூறி னார்.

தொடர்ந்து குறித்த சந்தேக நபர்களை பயங் கரவாத தடுப்பு சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டு விசாரணை செய்வ தற்கு மன் று அனுமதி அளிக் கின்றது. சந்தேக நபர்களுடன் தொடர்புடைய அனைத்து வங்கி கணக்குகளினையும் விசாரணை செய்ய மன்று கட்டளை இடுகின் றது என நீதிபதி கட் டளை பிறப்பித்தார்.

சுமார் நான்கு மணி நேர மாக நடைபெற்ற இவ் வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி தவ ராசா அனுசரணையில் சட்டத்தரணிகளான சுகாஸ், விஜயராணி, அம்பிகா, ஜனகன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கு மீண்டும் அடுத்த மாதம் 13 ஆம் திகதி எடுத் துக் கொள்ளப்படும்.

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் 15.06.2015 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் சாட் சியங்கள் பதிவு செய்யப்பட் டன.

வித்தியாவின் தாய் சரஸ் வதி, சகோ தரன் நிசாந்தன், தனியார் பஸ் நடத்துநர், ஊர்காவற் றுறை பொலிஸ் பரிசோதகர், ஊர்காவற் றுறை தலைமைப் பொலிஸ் அதி காரி என ஏழு பேரின் சாட்சியங்கள் வித்தியா வின் மரண விசாரணையின் பொருட்டு பதிவு செய்யப் பட்டன.

20.05.2015 அன்று மாணவி வித்தியாவின் படு கொலையைக் கண்டித்து யாழ்ப் பாணத்தில் ஆர்ப் பாட்டங் களும் பேரணி களும் இடம் பெற்றன.

இதன்போது ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட சிலர் யாழ்ப்பாணம் நீதிமன்றத் தின் மீது தாக்குதல் நடத் தினர்.

இத் தாக்குதலையடுத்து 130 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அநு ராத புரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டி ருந் தமை தெரிந்தவிடயமே.

இவ்வாறு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 130 கைதிகளும் பகுதி பகுதி யாக யாழ்ப்பாணம் நீதி மன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

இந்த வரிசையில் 04.06.2015 அன்று 40 பேர் யாழ்ப் பாண ந்திமன்றில் நீதிபதி பெ.சிவகு மார் முன்னி லையில் ஆஜர் படுத்தப் பட்டனர். இதில் 6 பேருக்குப் பிணை வழங்க மிகுதி 34 பேர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்ட னர்.

இதையடுத்து 09.06.2015 அன்று 33 பேர் யாழ்ப் பாண நீதிமன்றில் ஆஜர் ப டுத்தப்பட்டதுடன் 15 பேருக்குப் பிணை வழங் கப்பட ஏனைய 18 பேரும் தொடர்ந்து விளக்கமறிய லில் வைக்கப்பட்டனர்.

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் எதிர்வரும் 13ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன் றில் மீண்டும் வழக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

***குறிப்பு: இத்தொடர் நீதிமன்றில் வித்தி யாவின் வழக்கு இடம் பெறும் போது தொடரும்***

**புருசோத்மன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

161,பொன்னம்பலம் வீதியில் கடை வாடகைக்கு உண்டு. (941)

தொடர்புகளுக்கு : 075 7899 752


## பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களைத் தடுக்க ஆன்மீக ரீதியான விழிப்புணர்வு

யாழ்ப்பாணத்தில் அண் மைக் காலமாக அதிகரித்து வரும் பெண்கள், சிறுவர் கள் தொடர்பான துஷ்பிர யோகங்களை தடுப்ப தற்கு ஆன்மீக ரீதி யான விழிப்புணர்வு ஒன்றை தன்னார்வ செயற் பாட்டாளர்கள் சிலர் எதிர்வ ரும் 28 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை முற்ப கல் 10 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத் தில் முன்னெடுக்கவு ள்ளனர்.

மேற்படி விழிப்பு ணர்வு செயற் பாட்டிற்கு சைவமகாசபை பூரண ஆதரவு வழங்குவது டன் கலாசார உத்தி யோகத்தர்கள் ஊடாக அறநெறி ஆசிரியர்க ளையும் இந்து அமைப் புக்களின் பிரதிநிதிக ளையும், ஆலய நிர் வாகிகளையும் இதில் பங்குபற்ற வழி செய்யுமாறு சைவ மகாசபைச் செயலாளர் கேட்டு ள்ளார். (இ-3)


## பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்
## மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்

கீழே குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்களில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழே குறிப்பிடப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை 2015.07.16 ஆம் திகதி பிற்பகல் 2:30 வரை யாழ்ப்பாண மேல்நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐச் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிடப்பட்ட வாகனங்களை குறிப்பிடப்பட்ட நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடமுடியும். வாகனம் தொடர்பான விபரங்களும் மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திர வைப்புத்தொகை போன்ற விபரங்களும் பின்வருமாறு,

| வாகன விபரம் | மீளளிக்கக்கூடிய வைப்பு (ரூபா) | நீதிமன்றத்தின் பெயர் |
|---|---|---|
| 1.Mahendra Maximo (Red Colour- Small) | 5000.00 | மாவட்ட /நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை |
| 2.Mahendra Maximo (White Colour- Small) | 5000.00 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 3.Bajaj Auto Re 2 Stroke | 2000.00 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 4.Bajaj Auto (AR 4S Green) | 2000.00 | நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி |

கேள்விப் பத்திரங்களை கௌரவ மேல்நீதிமன்ற நீதிபதி, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2015.07.16ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக மேல்நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீதிமன்றத்தின் வாகனம் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம்-2015" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மா.இளஞ்செழியன் மேல்நீதிமன்ற நீதிபதி/
மேல்நீதிமன்றப் பெறுகைக்குழு தலைவர்,
மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(சி-1390)



## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
## இன்று ஆறாம் திருவிழா



சங்கடங்கள் தீர்த்திடவே! சடுதியிலே வந்திடுவாய்

இணையில்லா இணுவை கந்தா
இணையில்லா உன் நின்னருளை
என்ன சொல்லிப் பாடுவேன்
பாதம் பணிந்திடும் பக்தர் குலம் காத்திடுவாய்
உலகில் பெருமஞ்சமதில் உலா வரும் நாயகனே
எம் உவகை தீர உன் அருளை தரவேண்டும்
சங்குநாதம் முழங்க சண்முகனே வந்திடுவாய்
எம் சங்கடங்கள் தீர்த்திடவே சடுதியிலே வந்திடுவாய்
மயிலேறும் மால்மருகா குறவள்ளி மணாளா
உன்மஞ்சப்பவனி பார்க்கத்தான் மானிடராய்
பிறந்தோமோ?
கார்த்திகேயா காங்கேசா காவல் காத்திடு கந்தனே
உன் காலடியே சரணம் சரணம்

இ.நவசத்தியா
இணுவில்.

ஆறாம் நாள் உபயகாரர்



## சமையற்காரர் தேவை

(சைவபோசனம்)

தங்கி நின்று வேலை செய்யக்கூடிய குடிப்பழக்கம் அற்றவர் உடன் தேவை. சம்பளம் நேரில். (943)

சயிராம்
101,பலாலி வீதி, யாழ்ப்பாணம்



## டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/= (336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


## பொது அறிவித்தல்

இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை எனும் முகவரியிலுள்ள கே.கே.கே. அப்பரல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (KKK Apparels (pvt) Ltd) சில இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பன லான்ட் ஓ'லேக்ஸ் (Land O'Lakes) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் VEGA/BIZ+ வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படையான எழுத்து மூலமான சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது உரிமை மாற்றம் செய்யப்படவோ முடியாதென, பொது மக்களும் மற்றும் ஆடை உற்பத்தி கைத்தொழில் பிரதிநிதிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். ஒரு அரச- தனியார் பங்குடமையின் பகுதியாக, ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ், அதன் ஆடை உற்பத்தி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு கே.கே.கே. அப்பரல்ஸிற்கு பொருட்களாக நன்கொடையளிக்கப்பட்ட, இனங்காணப்படக் கூடிய மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சொத்துக்கள், 33 சிங்கர் கைத்தொழில் தையல் இயந்திரங்கள், ஒரு சிங்கர் அலங்காரத் தையல் (Embroidery) இயந்திரம், 14 துணை உதவி இயந்திரங்கள், ஒரு கேர்லோஸ்கர் 62.5 கி. வோ மின்பிறப்பாக்கி (Kirloskar 62.5 KV), ஒரு டிமோ டாடா லொறி, மற்றும் ஒரு லங்கா அசோக் லேலான்ட் போக்குவரத்துப் பேருந்து என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய அனைத்து சொத்துக்களும் சர்வதேச நன்கொடை நிதிகளால் நிதியளிக்கப்பட்டவை என்பதுடன் கிளிநொச்சி சமூகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களுக்காக அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட வேண்டிய பொதுப் பொருட்களாக கவனத்தில் கொள்ளப்படும். நன்கொடையாக அளிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வற் (VAT Free) வரியின்றி இலவசமாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பதற்கான விசேட கவனம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். விற்பனை, உரிமை மாற்றம், அல்லது சொத்துக்களின் கொள்வனவு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணிசமான வரிக் கடப்பாட்டை ஏற்படுத்தலாம். இந்த அறிவித்தல் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு 011-7391890 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

இல. 134, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி, இலங்கை.

(சி-1357)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 11 1/2 உயரம்: 175cm
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/4671

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 46 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் லண்டன் NOT PR
தொ.இ: B/4672

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 9 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4676

பிறப்பு: 1983 RC
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 17 1/4 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L லண்டன்
தொ.இ: B/4677

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: காரத்திகை
கி.பா: 82 சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/1464

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 58
உயரம்: 155cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/1467


பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 36 செவ் 12 இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/1470

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 38
தகைமை/தொழில்: MSC/ விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/1474

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற சான்றோர் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜாவினால் தென்னைப் பயிர்ச் செய்கை தொழில்நுட்ப உதவி முகாமையாளர் ஜெ.சத்தியேந்திரனுக்கு 'இரத்தினதீபம்'விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது...

# மாணவர்கள் இருவருக்கு நிபந்தனைகளுடன் பிணை

(யாழ்ப்பாணம்)

**வீதியில் ரவுடித்தனத்தில் ஈடுபட்டு, மாணவிகளுக்குத் தொல்லை கொடுத்து, தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு சேதம் விளைவித்த குழுவினருடன் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தினால் 6 மாதங்கள் சிறைத் தணடனை விதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரி மாணவர்கள் இருவருக்கு கடும் நிபந்தனையுடன் பிணையில் செல்வதற்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அனுமதியளித்துள்ளார்.**

இந்த மாணவர்கள் இருவரும் 2015 ஓகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகத் தெரிவித்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலை அதிபரின் கடிதங்களை ஆவணமாகச் சமர்ப்பித்து, இவர்களுக்குப் பிணை வழங்குமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி மேல் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி இந்த நபர்கள் சம்பந்தமான முற் குற்றம் இல்லை என்றும், தற் சமயம் அவர்களுக்கு எதிராக வேறு வழக்குகள் எதுவும் இல்லை எனவும், உறுதிப்படுத்தியிருந்ததையடுத்து, நீதிமன்றம், கடும்நிபந்தனைகளை விதித்து இந்த மாணவர்கள் இருவருக்கும் பிணை வழங்கி கட்டளைப் பிறப்பித்துள்ளது.

பிணையில் இருக்கும் காலத்தில் இவர்கள் இருவரும் ஏதாவது ஒரு குற்றம் புரிந்து, அதுதொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படடால், மேல் நீதிமன்றம் வழங்கியுள்ள இந்த பிணை உத்தரவை இரத்துச் செய்யுமாறு மல்லாகம் நீதவானுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் விசேட அனுமதி வழங்கி கட்டளை பிறப்பித்துள்ளார்.

இரண்டு சரீரப்பிணையாளிகள் கையொப்பமிட்டு இந்த மாணவர்களை அழைத்துச் செல்லலாம் என்றும், ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் காலை 9 மணிக்கு சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிபதி கடந்த 23 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# திருமஞ்சத்திருவிழா

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 10 ஆம் நாள் திருமஞ்சத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7மணிக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாளின் வீதியுலாவும் இடம்பெறும்.

விசேட நிகழ்வாக நாதஸ்வர தவில் கச்சேரிகளும் ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெறும். (இ-3)

# சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர்க்கோட்டத்திற்குள் நடைபவனி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர்க்கோட்டப் பாடசாலைகள் இணைந்து நடத்தவுள்ள ஊர்வலப் பவனி இன்று 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் 7 இடங்களில் இடம்பெறவுள்ளது என கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார்.

**ஊர்வலப் பவனி ஆரம்பிக்கும் இடங்கள்**

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி முன்பாக, யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரி முன்பாக, யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் முன்பாக, யாழ். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முன்பாக, யாழ். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக, யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயம் முன்பாக.

**தெருக்கூத்து இடம் பெறும் இடங்கள்**

திருநெல்வேலி, கொக்குவில் சந்தி, தட்டாதெரு சந்தி, நல்லூர் முன்றல், மாவட்ட செயலகம் முன்பாக, பழம் சந்தி என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாணவி வித்தியாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



புங்குடுதீவுமகா வித்தியாலய மாணவி வித்தியாவின் 45 ஆம் நாள் நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3)

## இன்று திறப்பு விழா

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-136)



வடமராட்சி கிழக்கு உடுத்துறை 9 ஆம் வட்டாரத்தில் உள்ள வீட்டுக்காணியில் மாமரம் ஒன்றில் மாங்காய்கள் வழமைக்கு மாறாக விசித்திரமான முறையில் காய்த்திருக்கின்றன. பலாக்காய்கள் காய்ப்பது போன்று மரத்தின் நுனியில் அல்லாமல் மொத்தமான கிளைகளில் இருந்து வெளிவரும் அரும்புகளில் இருந்து இந்த மாங்காய்கள் காய்த்துக் குலுங்குவதை படங்களில் காணலாம்.

(படங்கள்: பொற்பதி செய்தியாளர்)




# திருமறைக் கலாமன்றத்தின் தமிழ்விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா இன்று 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் இன்று காலை 8.45 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

பகல் நிகழ்வுகளாக ஆய்வரங்குகளும் மாலை நிகழ்வுகளாக கலை நிகழ்வுகளுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தமிழ்விழாவில் மூன்று நாட்களும்காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணி வரையும், தொடர்ந்து 1.45 மணி தொடக்கம்மாலை 4.30 மணி வரையும் ஆய்வரங்குகள் இல., 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்திலும் கலை நிகழ்ச்சிகள் மாலை 6 மணி முதல் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கிலும் நடைபெறவுள்ளன.

'ஈழத்துக்கலை.இலக்கியம் கருத்து நிலையும், நிலையும், இயங்குதளமும' என்னும் மையப்பொருளில் நாவல், பண்பாடு, ஊடகம், இணையம், சிறுகதை, விமர்சனம், மலையக இலக்கியம் , கவிதை , நாடகம் உட்பட 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன.

முதலாம் நாளில் முதலாவது அமர்வு நாவல் தொடர்பான அமர்வாக கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும். இதன்போது ஆய்வுரைகளை 'எடுத் துரைப்பியல் நோக்கில் ஈழத்து தமிழ் நாவல்கள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் செ.யோகராசாவும், 'ஈழத்து நாவல்களில் சமூக மாற்றம்' என்னும் தலைப்பில் ஈ.குமரனும், 'புலம்பெயர் நாவல்களின் நுண் அரசியலும், புதிய சாத்தியப்பாடுகளும்' என்னும் தலைப்பில் சு.குணே ஸ்வரனும், 'படைப்பு மனமும் அனுபவ வெளிப்பாடும்' என்னும் தலைப்பில் ச.ஆ.உதயனும் சமர்ப்பிப்பார்கள். (இ)

## 'எனையாளும் என் அன்னை' இசை இறுவெட்டு வெளியீடு

இந்தியாவின் புகழ்பூத்த இசையமைப்பாளர் இசை இராஜகீர்த்தி அ.இலக்கியனின் இசையில் தாய்சக்தி கலைக்கூடம் வழங்கும் இராஜமகாமாரி அம்மன் புகழ்பாடும் "எனையாளும் என் அன்னை " இசை இறுவெட்டு வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு புளியங்கூடல் இராஜமகாமாரி அம்மன் திருக்கோவிலில் இடம்பெறவுள்ளது.(இ-3)

## கல்விக்கண்காட்சி

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் கல்விக்கண்காட்சி இடம்பெறவுள்ளது.

கல்விக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, டாக்டர் கதிர்காமு தர்மலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



இணுவில் கிழக்கு சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற மூத்த சமூகநலப் பணியாளர் கௌரவிப்பும் "புற்றுநோய் தவிர்ப்போம் " நூல் வெளியீடும இடம்பெற்றபோது....

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகருக்குக் கௌரவிப்பு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த மூன்று வருடங்களாக வைத்திய அத்தியட்சகராக சேவை செய்து தற்போது முதுகலாநிதி பட்டமேல் படிப்புக்காக செல்லும் வைத்திய கலாநிதி மு.உமாசங்கருக்கு தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைச் சமூகம் சேவைநயப்பு விழாவை நடத்தவுள்ளது.

நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு கேட்போர் கூடத்தில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசியுரைகளை தெல்லிபழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும், உடுவில் தென்னிந்தியத் திருச்சபை பங்குத்தந்தை அதிவண. இ.ராஜ்குமாரும் வழங்குவர்.

வரவேற்புரையை தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரனும் வாழ்த்துரைகளை வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன், உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சா.சிவயோகன், நோயாளர் நலன்புரிச் சங்க நிர்வாகசபை உறுப்பினர் வை.சுப்பிரமணியம் ஆகியோர் வழங்குவர்.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரனின் நன்றியுரையைத் தொடர்ந்து விழாநாயகர் கௌரவிப்பும் விழாநாயகர்வைத்திய கலாநிதி மு.உமாசங்கரின் ஏற்புரையும் இடம் பெறும். தொடர்ந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான வீடியோ ஒளிப்பதிவும் கலைநிகழ்வுகளும் நடைபெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக்குருமார் குருகுலத்தினை மீளச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை

## காணியை குத்தகைக்கு எடுக்குமாறும் பணிப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்காதுள்ள இந்துக் குருமார் குருகுலத்தை மீளவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்த குருகுலம் அமைந்துள்ள காணியை நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கி அதன் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை சந்தித்து இந்து குருகுலத்தை மீளவும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையினை எடுக்கவேண்டுமென கோரியிருந்தனர். இதற்கிணங்க நேற்று முன்தினம் பிற்பகல் இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை அவரது அமைச்சில் சந்தித்து பேசிய பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குருகுலத்தை மீள இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினார்.


2003 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சராக தி.மகேஸ்வரன் பதவி வகித்த காலத்தில் யாழ்ப்பாணம் இந்துகுருமார் குருகுலம் அமைக்கப்பட்டது. யாழ்.மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டு வந்த இந்த குருகுலத்தின் செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டது. இதனை இந்து கலாசார திணைக்களம் பொறுப்பேற்றிருந்தது. இதனால் குருகுல சேவைகள் இடம்பெறவில்லை.

இந்த நிலையிலேயே கலாசார அமைச்சர் சுவாமிநாதனுடன் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. குருகுலம் அமைக்கப்பட்ட காணியினை நீண்டகால குத்தகைக்கு பெற்றுக் கொடுத்து அதற்கான தளபாடங்கள் மற்றும் நிதியுதவியினை அமைச்சு வழங்க வேண்டுமென பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் சுவாமிநாதன் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-3)

# பொதுமக்களின் நிலைப்பாட்டை கொள்ளையிடப் போவதில்லை

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

இடைக்கிடை தேர்தலை நடத்தி பொதுமக்களின் நிலைப்பாட்டை கொள்ளையிடப் போவதில்லை என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலத்தில் அடிக்கடி தேர்தலை நடத்தப் போவதில்லை. ஒரே நாளில் தேர்தலை நடத்தி தங்கள் விரும்பிய அரசியல் கட்சி. செயற்றிட்டம் ஒன்றை தெரிவு செய்து கொள்ளும் அடிப்படை ஜனநாயக உரிமையை உறுதி செய்வோம்.

ஆண்டு முழுவதிலும் தேர்தலை நடத்தி மக்கள் மீது மேலதிக சுமைகளை திணிக்கத் தயாரில்லை.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாரியளவில் பொதுமக்கள் பணத்தை சேமிக்க முடிவதுடன் மக்களின் மெய்யான ஜனநாயக நிலைப்பாட்டை வெளிப்படுத்த சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என அமைச்சர் கரு ஜயசூரிய சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மெற்றோ கம்பசின் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

ESOFT Metro யாழ். கிளையின் வருடாந்தம் நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இல. 137, K.K.S வீதியில் (HSBC வங்கி மேல் மாடி) அமைந்துள்ள வங்கி கிளையில் நடைபெறவுள்ளது. (இ-3)



கோண்டாவில் மத்தி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தன் சார்பில் அதன் தலைவர் சு.பரம்சோதி கோண்டாவில் பிரதேச வைத்தியசாலை யின் பற்சிகிச்சை பிரிவுக்கு பல்பிடுங்குகின்ற இரண்டு இயந்திரங்களை அன்பளிப்புச் செய்த போது...





சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூஷணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம். வனிலா, சொக்லேட், ஸ்ரோபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளுவெரி, ராஸ்பெரி, பெப்பிமென்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Sylo Ice Cream** இல. 442 அஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.


## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று பத்தாம் திருவிழா



### நித்தமும் உன் ஆசியை வேண்டுகிறோம்

கத்து கடலினால் சூழ்ந்திடும் மண்ணிலே
கனன்று நின்று நின் அருளொளி தந்திடும்
பெத்த பிள்ளைகள் போலெமை எண்ணியே
பெரு விருப்புடன் ஏற்றிடும் பூஷணி
சத்தியமாய் தமிழ்ச் சாதியும் உன்னையே
சரித்திரம் தனில் என்றுமே வைத்திட
நித்தமும் உன் ஆசியை வேண்டுகிறோம்
நிமலனோடுறைகின்ற எம் தாயுனை

சா.லதுசாந்
யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை

### நீயே என் தாயம்மா

நீயே என் தாயம்மா –தாயவளை
காணத் துடிக்கும் சிறு பக்தன் நானம்மா
பாம்பணையில் வீற்றிருந்து
பாமரர் துயர் களையும் பார்வதியே
நயினையில் வீற்றிருந்து
நல்லருள் புரியும் நாகபூஷணியே
அண்டம் காக்கும் அபிராமியே
என்னையும் கண்கொண்டு பார் சாம்பவியே!!

பாரதிதாசன் சத்யா
அல்வாய் வடக்கு

### என்றுமில்லை துன்பம்...!

நாக குடையின் கீழிருந்து
நாற்திசையும் அருள் பாலிக்கும்
நாகபூஷணியே–அம்மா
உன் அழகிய வதனங்களையும்
உன் அற்புதங்களையும்
வாழ்த்த வார்த்தைகளோ–பல
ஆயிரங்கள் –தாயே
உன் அருள் பெற– ஆழ்கடல்
தாண்டி அலை அலையாய்
பக்தர் கூட்டம் –உனைநாடி
வருவோர்க்கு என்றுமில்லை துன்பம்

யே. சிவலோஜினி
வயாவிளான்

### நயினை அம்பிகை பாமாலை

நயினை தாயவளின் சன்னிதியில்
கால் பட்டால் போதுமடா
நம் கர்ம வினை போகுமடா
நாம் கை கூப்பி தொழுதுவிட்டால்
நாம் நினைப்பதெல்லாம் சித்தியடா
ஓடிவந்து பாரடா உண்மையது புரியுமடா

த.அபிநாத்
கோவில் வீதி
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

கிளிநொச்சியில் பெரும்பாலான பாடசாலைகளில் குறிப்பாக கிராமங்களில் தொடர்ச்சியாக ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்த நிலைமையை வெளியில் கூற முடியாத அளவுக்கு அதிபர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக்குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி தெற்கு ஜெயபுரம் பிரதேசத்தில் தனது விசேட நிதி ஒதுக்கீடான நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவில் அமைக்




கப்பட்ட மாலைநேரக் கல்வி நிலையத்தினை மாணவர்களிடம் கற்றல் செயற்பாடுகளுக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சியில் தற்போது தொடர்ச்சியாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உள்ளடங்கலாக பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது.

ஜெயபுரம் பிரதேசத்தை பொறுத்த வரை மீள்குடியேற்றத்திற்கு பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிக முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்திருக்கின்றோம். இதனால்தான் கடந்த காலங்களில் ஏற்படாத மாற்றம முன்னேற்றம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்த பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு மட்டும் நானூறு மில்லியன் ரூபாக்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. 72 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைக்கு கட்டடம் உள்ளிட்ட பௌதீக வளங்கள் கொண்டு வரப்பட்டன.

இருந்தும் மாணவர்களால் அதன் முழுமையான பயனை பெற்றுக்கொள்ள முடியவில்லை காரணம் தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையே. இதனால் பாடசாலைகளின் அதிபர்கள் நெருக்கடி மிக்க நிலையில் தங்களது கடமைகளை மேற் கொண்டு வருகின்றார்கள் எனத் தெரி வித்தார்.

இன்று ஜெயபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாலை நேரக் கல்வி நிலையமானது இங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மேலும் ஒரு உந்து சக்தியாக அமையும். எங்களது நோக்கம் கிராமங்களில் சிறந்த கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவது. அதன் மூலம் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கி கிராமங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் கல்விக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். அதன் விளைவாக மாற்றத்தையும் கண்டிருக்கின்றோம்.

அத்தோடு ஜெயபுரம் மக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. முதன்மைப்படுத்தி கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே விரைவில் வயற்காணிகளை மக்களுக்கு வழங்கும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்தோடு ஜெயபுரத்தில் காணப்படுகின்ற முக்கிய பிரச்சினையான ஒன்று, இரண்டு அங்கத்தவர்களுக்கான வீட்டுத்திட்டம். இதனை நாம் எல்லா இடங்களிலும்,உயர் மட்ட கூட்டங்களிலும் வலியுறுத்தி வருகின்றோம். எனவே இவர்களுக்கான ஒரு சிறந்த அரைநிரந்த வீட்டுத்திட்டத்தையேனும் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை முன்னெடுத்திருக்கின்றோம். எனவே கடந்த காலம் போன்று தொடர்ந்தும் ஜெயபுரம் மக்களின் எலலா விடயங்களிலும் நாங்கள் உறுதுணையாக நின்று செயற்படுவோம். எங்களால் மட்டுமே ஜெயபுரம் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக உண்மையாக உழைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார். (2)

### நூல் வெளியீட்டு விழாவும் மூத்த எழுத்தாளர் கௌரவிப்பும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கவிஞர்களின் ஒன்றிணைவில் முல்லைத்தீபன் தொகுத்திருக்கும் முல்லைக்கவி(தை)கள் நூல் வெளியீட்டு விழாவும் மூத்த எழுத்தாளர்கள் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை, சிரேஷ்ட விரிவுரையாளரும் ஈழத்துக் கவிஞருமான செல்லத்துரை சுதர்சன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன், முள்ளியவளை அடங்காப்பற்றான் அருணா செல்லத்துரை, தண்ணீரூற்று ஈழத்துக் கவிஞர் முல்லை முஸ்ரியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை கற்சிலைமடு அ.த.பா.அதிபர் கம்பீரக்குரலோன் நாகேந்திரராசா, ஆற்றநூல் ஆய்வுரையை முல்லைக் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.பீதாம்பரம் நிகழ்த்துவார். (2)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தனது மாகாண சபை நிதியொதுக் கீட்டில் இருந்து 5இலட்சம் ரூபாவை கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்திற்கு வழங்கி முதலாவது நிரந்தர செயற்பாட்டறை கட்டடம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்துள்ளார். இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது...

### ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(முள்ளியவளை)

மு/வித்தியானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இ.தங்கராசாவின் முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி அமரரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியும் தங்கராசா ஞாபகார்த்த நிதியத்தில் இருந்து 2014, 2015 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.திருஞானம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் அமரரின் வரலாற்று பதிவுகள் உள்ளடங்கிய சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வுகள் அனைத்தும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-300)

# வன்னி மண் யாருக்கும் இலகுவில் அடிபணியாது

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு



வன்னி மாவட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களைத் தொழில் முனைவோர்களாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இதனை, பயணிகள் ஓய்வகத்துக்கு, நிறுவனங்கள் செலவிட்டுள்ள பணத்தில் ஒரு தொகையும் வீண் போகாது. வன்னிப் பெண்கள் சாமானியர்கள் அல்லர். அவர்கள் மீளவும் சாதித்துக் காட்டுவார்கள் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

மாங்குளம், கண்டி வீதியில் கைப்பணிப் பொருட்களின் காட்சியறை மற்றும் பாரம்பரிய உணவகத்துடன் கூடிய பயணிகள் ஓய்வகம் ஒன்றை, பெண்களைப் பங்குதாரர்களாகக் கொண்ட வன்னி வள சுய அபிவிருத்தி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

யு.எஸ்.எய்ட் மற்றும் எஸ்.டி.சி. நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட இப்பயணிகள் ஓய்வகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்னி மண் யாருக்கும் இலகுவில் அடிபணியாது. பண்டாரவன்னியனின் படைகள் மன்னாரில் இருந்து மாங்குளம் ஊடாக முன்னேறிய ஆங்கிலேயப் படைகளை பதினெட்டுத் தடவைகள் முறியடித்ததாக வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது.

இப்போது நடந்து முடிந்த போரிலும் இலங்கை அரசு இலகுவில் வெற்றிபெறவில்லை. எத்தனையோ தடவைகள் படையெடுப்புகளை நடத்தியிருக்கிறது. அதனை எதிர்கொண்டதில் வன்னிப் பெண்களின் தீரமும் தியாகமும் பெருமளவுக்கு இருக்கிறது.

கடின உழைப்பாளிகளான இந்த வன்னிப் பெண்களே போரினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளார்கள். தொழில் வாய்ப்பு இல்லாதவர்களாகவும், அங்கவீனர்களாகவும், குடும்பத் தலைவர்களை இழந்தவர்களாகவும் பாதுகாப்பு அற்றவர்களாகவும் இவர்கள் எதிர்நீச்சல் போடவேண்டியுள்ளது.

போருக்குப் பின்னர் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏராளமான உதவிகளை வழங்கிய போதும் பெண்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவுக்கு முன்னேறவில்லை.

பெரும்பாலான உதவிகள், மீனை பிடிப்பதற்குக் கற்றுக் கொடுப்பதற்கு பதிலாகச் சாப்பிடுவதற்கு மீனைக் கொடுப்பது போல் இருந்ததே இதற்கான காரணம் ஆகும்.

பெண்களைப் பங்குதாரர்களாகவும் தொழில் முனைவோராகவும் கொண்டு வன்னி வள சுய அபிவிருத்தி நிறுவனம் உருவாக்கப்பட்டு, அவர்களின் தொழில் முயற்சியொன்றுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளன.

ஏறத்தாழ 13 மில்லியன் ரூபாய் செலவில் இந்தப் பயணிகள் தங்ககம், மிகப் பொருத்தமான ஒரு இடத்தில் கண்டி வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

வன்னியின் சுவையைப் பறைசாற்றும் உணவகமும் அமைய இருப்பதால் பொருளாதார ரீதியான வெற்றியை இந்த உணவகம் எமது பெண்களுக்குப் பெற்றுத்தரும்.

இதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய மாதர் அமைப்புகளும் உதவிகளை மற்றவர்களிடம் இருந்து தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பவர்களாக இல்லாது தொழில் முனைவோராகவும் தொழில் வழங்குநர்களாகவும் மாற்றம் பெற வேண்டும் என்று அமைச்சர் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பினை முன்னிட்டு வவுனியாவில் போட்டிகள்

தமிழர் பண்டிகைகளில் ஒன்றான ஆடிப்பிறப்பினை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைவாக மேற்படி போட்டிகள் நடத்தப்படவுள்ளன என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா அறிவித்துள்ளார். தரம் 3 முதல் 5 வரையான வகுப்பு மாணவர்கள் மத்தியில் சோமசுந்தரப்புலவரும், ஆடிப்பிறப்பும் என்ற தலைப்பில் (5நிமிடம்) பேச்சுப் போட்டியும்.

தரம் 10, 11 வகுப்பு மாணவர்கள் மத்தியில் சோமசுந்தரப்புலவர் ஒரு தமிழ்ப் பண்பாட்டுப் புலவர் என்ற தலைப்பிலான (1000 -1500 சொற்கள்) கட்டுரைப் போட்டியும்.

சோமசுந்தரப்புலவர் பாடிய ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடலை மையமாகக்கொண்டு குழுப்பாடல் போட்டியும் (தரம் 6 முதல் 9 மாணவர்களுக்கானது)- ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடலை மையமாகக்கொண்டு தனிப் பாடல் போட்டியும் (தரம் 11, 12 மாணவர்களுக்கானது)- தற்கால சூழ்நிலையில் தமிழர் பண்டிகைகள் என்ற தலைப்பில் கவிதை பாடல் போட்டியும் (தரம் 10 முதல் 12 மாணவர்களுக்கானது)- நடத்தப்படவுள்ளன.

குறித்த போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வவுனியா பிரதேச பாடசாலைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என்று வவுனியா பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் மேற்கொண்டு வருகின்றார். (2)

# 29 மில். ரூபா நிதியொதுக்கீட்டில் இலகு தவணைக் கடன் திட்டம்

## 345 பயனாளிகளுக்கு வழங்கி வைப்பு

தேசிய வீடமைப்பின் 23ஆவது ஆண்டை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 345 பயனாளிகளுக்கு, இலகு தவணை கடன்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி முகாமையாளர் விஜித கமகே தலைமையில் இடம்பெற்ற இந்நிழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் சி.மோகனதாஸ், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பணிப்பாளர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கமலநாதன் விஜிந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்றில் 43 பயனாளிகளுக்கும் புதுக்குடியிருப்பில் 52 பயனாளிகளுக்கும் ஒட்டுசுட்டான் 35 பயனாளிகளுக்கும் துணுக்காய் 63 பயனாளிகளுக்கும் மாந்தை கிழக்கில் 24 பேருக்கும் வெலிஓயாவில் 128 பேருக்கும் தலா 20ஆயிரம் ரூபா வீதம் குறித்த கடன் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கென 29.73 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# அதிகளவான பயணிகளை பேருந்தில் ஏற்றுவது தவிர்க்கப்படல் வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் பேருந்துகள் பயணித்துக் கொண்டிருக்கும்போது பயணிகள் ஓடிச் சென்று ஏறுவது மற்றும் அளவுக்கு அதிகமான பயணிகளை பேருந்தில் ஏற்றுவது தவிர்க்கப்படல் வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பில் தெரியவருவதாவது,


கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக கனகபுரம் வீதியில் நின்று பயணிகளை ஏற்றி செல்கின்ற பேருந்துகள் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு பேருந்து புறப்பட்ட நேரத்தில் வீதியை கடந்து ஓடிப்போய் ஏறுவதால் மிக பெரும் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக சமூக ஆர்வலர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்துடன் கடந்த 23ஆம் திகதி அன்று மாலை 5.40மணியளவில் கனகபுரம் வீதியில் கோணாவில் ஊடாக பயணிகளை ஏற்றி செல்கின்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து அதிக அளவான பயணிகளையும் ஏற்றி மிதி பலகையில் தொங்கியபடி எட்டுப்பேர் சென்றனர்.

இதனால் பாரிய விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை பேருந்து நடத்துநர்,சாரதி ஆகியோர் கவனம் செலுத்தவேண்டும்.

ஆகையால் விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு இது போன்றவற்றை தவிர்க்கவேண்டும் எனவும் மீறி இவ்வாறான செயலில் ஈடுபடுகின்ற பேருந்துகளை கிளிநொச்சி பேருந்து சங்கத்தினர், இலங்கை போக்குவரத்து சபை, கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் கூடிய கவனம் எடுக்குமாறு சமூக ஆர்வல-ர்களால் கோரிக்கை ஒன்று முன் வைக்கப்படுகின்றது. (2-271)

# தேசிய போசாக்கு சிறப்பு கண்காட்சி



தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய போசாக்கு தொடர்பிலான சிறப்பு கண்காட்சி, முசலி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முசலி சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்ரன் சிசில், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார போசாக்கு உத்தியோகத்தர் கே.சுதர்மன், கௌரவ விருந்தினர்களாக மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் மாவட்ட இணைப்புச் செயலாளர் பத்திநாதன் ஜெரோம், மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜே.ஜே.கெனடி, வைத்தியர்கள் மற்றும் அதிபர்கள் என பலரும் கலந்துகொண்டு தேசிய போசாக்கு தொடர்பிலான சிறப்பு கண்காட்சியை பார்வையிட்டனர். (2)

# கிணற்றினுள் தவறுதலாக விழுந்த மாணவி சிறுகாயங்களுடன் மீட்பு

(முள்ளியவளை)

மாணவி ஒருவர் கிணற்றில் நீர் அள்ளிய வேளை தவறுதலாக உள்ளே விழுந்து மீட்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மு/கேப்பாப்பிலவு அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

இதில் தரம் 5இல் கல்விகற்று வரும் தர்மராசா சஞ்சிகா (வயது-10) என்ற சிறுமியே தவறுதலாக விழுந்து காயங்களுடன் மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாணவர்கள் இடைவேளையின் போது உணவருந்தி விட்டு நீர் அருந்துவதற்காக கிணற்றடிக்கு சென்றனர்.

இதன்போது மாணவி ஒருவர் நீர் அள்ள முற்பட்டவேளை தவறி கிணற்றினுள் விழுந்தார்.

வாளியின் கயிற்றை இறுக பற்றிப் பிடித்தமையால் கிணற்றின் ஆழத்திற்கு செல்லாது நீர் மட்டமளவில் தத்தளித்துக்கொண்டிருந்தார்.

இதனையடுத்து ஏனைய மாணவர்கள் இது தொடர்பான தகவலை பாடசாலை அதிபருக்கு தெரிவித்தபோது அயலில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 592ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினர் உதவிக்கு அழைக்கப்பட்டு மாணவி காப்பாற்றப்பட்டார்.

மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (2-300)




# மன்னார் நகரில் மாபெரும் கையெழுத்துவேட்டை நாளை


மன்னார் நகரத்தில் நாளை சனிக்கிழமை மாபெரும் கையெழுத்து வேட்டையொன்று நடைபெறவுள்ளது.

மன்னார் சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில், மன்னார் நகர மண்டபத்தில் குறித்த கையெழுத்து வேட்டை இடம்பெறவுள்ளது.

"அரசியல்வாதிகளுக்கு வேட்பு மனு வழங்கும் போது கருத்திற் கொள்வதற்கு அரசியல் கட்சிகள் இணங்கிய பொதுவான அளவுகோல்கள்" என்னும் கணிப்பீட்டு ஒப்பந்தத்தில் பல சிரேஷ்ட அரசியல்வாதிகளும் பல கட்சிகளைச் சேர்ந்தோரும் கையொப்பமிடவுள்ளனர்.

இப்பிரகடனம், "மார்ச் 12 பிரகடனம்" என அழைக்கப்படுகின்றது. அந்த வகையில் இப்பிரகடனத்தில் உள்ள அனைத்து அளவுகோல்களையும் நாட்டின் பிரஜைகள் வாசித்து புரிந்துகொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்காக கையெழுத்து வேட்டை நாடு பூராகவும் தொடராக இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.35 மணி தொடக்கம் 2.30 வரை இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)



கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரேஸ்வரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த 23ஆம் திகதி காலை 9 மணியளவில் நடைபெற்றபோது... (படங்கள்: சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




களத்துமேட்டில் யாருமற்ற பகுதியில் சிதறிக்கிடந்த தானியத்தைத் தயங்கித்தயங்கி ஒரு சிட்டுக்குருவி கொத்தித் தின்றுகொண்டு இருந்தபோது வேறு ஒரு திசையில் இருந்து சர்ரென்று பறந்து வந்து இறங்கி உட்கார்ந்தது ஒரு புறா.

எப்போது பார்த்தாலும் எதையாவது தின்றுகொண்டே இருக்கிறாயே உனக்கு வெட்கமே இல்லையா? சிறகுகளை ஒருமுறை விரித்துப் படபட என்று அடித்தபடி குருவியிடம் கேட்டது புறா.

என் பசிக்கு நான் சாப்பிடுகிறேன், இதில் என்ன வெட்கம்? டது குருவி. ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல் அப்புறம் வீடு, கூரை, கட்டடம், ஏரிக்கரை, வாய்க்கால் எல்லாம் பறந்து செல்வேன் என்று அழுத்தமாகச் சொன்னது.

புறாவின் பக்கமே திரும்பாமல் தன் போக்கில் தரையில் சிதறிக் கிடந்த தானிய மணிகளைக் கொத்திக் கொத்தி விழுங்கியது.

சிறிது நேரம் எந்தச் சத்தமும் கேட்க வில்லை. புறா பறந்து போய் இருக்கும் என்று நிம்மதியாக மூச்சு வாங்கியபடி தலையைத் திருப்பியது குருவி. ஆனால், புறா அங்கேயே உட்கார் எல்லாம் முடியும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னது.

அப்படி என்றால் கிளம்பு. என்னோடு சேர்ந்து நீயும் பறந்து வா- புறா தன்னைப் பார்த்து புன்னகை செய்த விதம் குருவிக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. நெஞ்சை அழுத்துவது போல இருந்தது. தனக்கு திறமை உண்டு என பதைப் புறா உணரும்படி செய்ய வேண்டும் என நினைத்தது.

சரி கிளம்பு என்றபடி சிறகுகளை விரித்துப் பறந்தது. வா, வா என்றபடி சிரித்துக்கொண்டே சிறகை அசைத்த புறா ஒரே

# உயர உயர பறக்கலாம்

வெற்றிலைக்காம்பு போன்ற சின்ன அலகால் தானியத்தைக் கொத்தி விழுங்கிவிட்டு வேகமாகத் தலையை அசைத்தது குருவி.

பசியைத் தவிர வேறு எந்த எண்ணமோ ஆசையோ கிடையாதா உனக்கு? கிண்டல் செய்யும் தொனியில் குர்குர் என்று குணுகிக் குலுங்கியது புறா.


இல்லை என்று நீயாகவே ஏன் நினைத்துக்கொள்கிறாய்? எனக்கும் ஆசை இருக்கிறது. கீச்கீச் என்று கோபமாகச் சொன்னது சிட்டுக் குருவி. அதன் உடல் நடங்குவது போல இருந்தது.

இத்தனை நாள் நீ சொன்னதே கிடையாதே, சொல் குருவி என்ன ஆசை? கெஞ்சுவதுபோலக் கேட்டது புறா.

எல்லாக் காலத்துக்கும் ஏற்ற பாதுகாப்பான ஒரு கூடு. அதுதான் என் ஆசை. புறாவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னது குருவி. ஒரு தானியத்தை வேகமாகக் கொத்தி விழுங்கியது.

உயிர் பிழைத்து இருக்க இந்த ஆசை ரொம்ப அவசியம்தான் குருவி. ஆனால், நான் அதைக் கேட்க வில்லை. அதைத் தவிர வேறு என்னென்ன ஆசைகள் உண்டு?

பறப்பதற்கும் ஆசை உண்டு தெரியுமா? தலையை உயர்த்திச் சொன்னது சிட்டுக்குருவி.



எவ்வளவு உயரத்துக்கு உன்னால் பறக்க முடியும்? என்று கேட்டது புறா.

இந்த மரம் உயரத்துக்குப் பறப்பேன் என்று அருகில் தெரிந்த ஒரு பெரிய அரசமரத்தைக் காட்டிச் சொன்னது குருவி.

குருவி அலகை உயர்த்திக் காட்டிய மரத்தை அண்ணாந்து பார்த்தது புறா. இது எல்லாம் ஒரு உயரமா? என்று எண்ணிக் கொண்டது.

அப்புறம்?

ஒரு மரத்தில் இருந்து இன்னொரு மரத்துக்குப் பறப்பேன்.

அப்புறம்?

மீண்டும் ஒரே மாதிரி கேள்வி கேட்கப்பட்டதில் சலிப்புக் கொண்டு இருந்தது.

மரத்துக்கு மேலே வானத்தை நோக்கிப் பறப்பாயா? அந்த மேகத்தை நோக்கிப் பறப்பாயா? குறைந்தபட்சம் அந்தக் குன்றை நோக்கியாவது பறப்பாயா? அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்தது புறா.

குருவி வானத்தையும் மேகத்தையும் குன்றையும் அண்ணாந்து பார்த்தது. கண்கள் கூசின. அவற்றின் உச்சியையே அதனால் பார்க்க இயலவில்லை.

ஒரே வெள்ளைத்திட்டாகத் தெரிந்தது. ஒரு கணம் தன் இயலாமையை நினைத்து மனம் பொங்கியது. அதே தருணத்தில் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் விவேகமும் அதற்கில்லை.

நொடியில் மர உச்சியைத் தொட்டு வட்டம் இட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் முன்னால் பறந்துபோய் தவிப்போடு பறந்து வரும் குருவியை வேடிக்கை பார்ப்பதில் புறாவுக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

மர உச்சியைக் கடந்து குன்றை நோக்கிப் பறந்தது குருவி. வழக்கமான உயரத்தை விட பல மடங்கு அதிக உயரத்தில் பறப்பதை நினைத்து தனக்குத்தானே ஆச்சரியத்தில் மூழ்கியது. ஆனால், வழக்கமாகப் பறக்கும் போது தன் மனம் உணர்கிற பரவசத்தை அக்கணத்தில் குருவியால் உணர முடியவில்லை. குன்றின் பிரமாண்டமான தோற்றம் ஒருபக்கம் அச்சத்தைப் பெருக்கியபடி இருந்தது.

அடிவயிறு வலித்தது. தொண்டை உலர்ந்துபோனது. ம்.... அப்படித்தான் வா, வா என்று மீண்டும் மீண்டும் தூண்டி முன்னால் பறந்தது புறா.

விலாப்புறத்தில் தொடங்கிய வலி, மெள்ள மெள்ள உடல் முழுதும் பரவி நெஞ்சை அழுத்துவதை உணர்ந்த குருவி, ஒரு புள்ளியில் தடுமாறி நின்றது. புறாவையும் வானத்தையும் மெதுவாக நிமிர்ந்து பார்த்தது. ஒரு துளியும் மகிழ்ச்சியே இல்லாமல் பறப்பது எவ்வளவு பெரிய வேதனை என்று நினைத்தது.

கூட்டுக்கும் களத்துமேட்டுக்கும் இடைப்பட்ட சிறிய தூரத்தைப் பறந்து கடப்பதில் இருக்கும் ஆனந்தமும் துள்ளலும் மாபெரும் உயரத்தை நோக்கிப் பறக்கும் போது பல மடங்காகப் பெருகும் என்று நினைத்த கனவு பொய்த்துப் போவதை அதனால் நம்பவே முடியவில்லை.

மகிழ்ச்சி இல்லாத செயலை வீம்புக்காக செய்வது வீண் வேலை என்று குருவிக்கு தோன்றியது. மரத்தின் உச்சியே தனக்கு வானம் போலும் என நினைத்தது.

அடுத்த கணமே களத்துமேட்டை நோக்கி இறங்கத் தொடங்கியது. அதைப்பார்த்த புறா குருவியை நோக்கிக் கூச்சலிட்டது.

நில் நில் ஏன் திரும்புகிறாய்? முடியவில்லையா? இவ்வளவு தான் உன் திறமையா? என்று ஏதேதோ கேள்விகள் கேட்டபடி புறாவும் தரையை நோக்கிப் பறந்து வந்தது.

தரையில் இறங்கிய குருவி நிழலில் ஒதுங்கி நின்றது. அதன் உடல் நடுங்கியபடி இருந்தது. கண்களை உருட்டி உருட்டி நான்கு பக்கங்களிலும் மெதுவாகப் பார்த்தது.

தன் கேள்விகளை இடைவிடாமல் கேட்டுக் கொண்டே குருவியின் அருகில் வந்து நின்றது புறா.

உன் வாழ்க்கையை நான் ஏன் வாழ வேண்டும் புறாவே. என் வாழ்க்கையே எனக்கு ஆனந்தம். என் போக்கில் என்னை விட்டுவிட்டுப் போ. என்னைத் திசை திருப்பிக் குழப்ப நினைக்காதே! தெம்பு இல்லாமல் போனாலும் உறுதியான குரலுடன் சொல்லிவிட்டு பக்கத்தில் இருந்த தானியத்தைக் கொத்தத் தொடங்கியது குருவி.

இங்கே பார், நான் சொல்வதைக் கேள். ஆசையைக் கட்டுப்படுத்த நினைக்காதே என்று தொடங்கி, புறா எதை எதையோ சொன்னபோதும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஒரு கட்டத்தில் குருவியின் மௌனத்தால் எரிச்சல் கொண்ட புறா தின்னு, தின்னு முட்டாள் குருவி என்று முனகியபடியே வேறு பக்கம் பறந்து போனது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

06.2015
26

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 363 - உரோமப் பேரரசன் ஜூலியன் கொல்லப்பட்டான்.
- 1483 - மூன்றாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1541 - இன்கா பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்த பிரான்சிஸ்கோ பிசாரோ கொல்லப்பட்டான்.
- 1690 - தென்மேற்கு இங்கிலாந்தின் நகரான டெயின்மவுத் நகரை பிரான்ஸ் முற்றுகையிட்டது.
- 1718 - தனது தந்தை மன்னர் முதலாவது பியோத்தரை கொல்லச் சதி செய்ததாக மரணதண்டனை விதிக்கப்பட்ட ரஷ்யாவின் இளவரசன் அலெக்சி பெட்ரோவிச் மர்மமான முறையில் இறந்தான்.
- 1723 - அசர்பைஜான் தலைநகர் பாக்கூ ரஷ்யாவிடம் வீழ்ந்தது.
- 1924 - அமெரிக்க ஆக்கிரமிப்புப்படை டொமினிக்கன் குடியரசை விட்டு விலகியது.
- 1948 - முதலாவது இருதுருவ திரிதடையத்துக்கான காப்புரிமத்தை வில்லியம் ஷோக்லி பெற்றார்.
- 1960 - சோமாலிலாந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1975 - இந்திரா காந்தி இந்தியாவில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார்.
- 1976 - உலகின் மிக உயரமான கட்டடமான கனடாவின் சி.என் கோபுரம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1824 - வில்லியம் தாம்சன், அயர்லாந்தைச் சேர்ந்த இயற்பியல் அறிஞர் (இ 1907)
- 1838 - பான்கீம் சட்டர்ஜி, வங்காள எழுத்தாளர் (இ. 1894)
- 1892 - பெர்ல் பக், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1973)
- 1924 - இளையபெருமாள், தமிழ்நாடு தலித் அரசியல் தலைவர் (இ. 2005)
- 1906 - ம. பொ. சிவஞானம், தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (இ. 1995)

இறப்புகள்

- 1995 - ஏர்னெஸ்ட் வோல்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)

சிறப்பு நாள்

- சித்திரவதைக்குள்ளானோருக்கான சர்வதேச ஆதரவு தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...அது மட்டுமல்லாமல், புத - சுக்ர யோகமும் இருப்பதால், செல்வம், வசதி, வாய்ப்புகள் போன்றவற்றைக் கொடுக்கும் கோடீஸ்வர யோகமும் இவருக்கு வந்து சேருகிறது.

**தைரியம்**

லக்னாதிபதி சூரியன் விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார். ராஜ கிரகம் சூரியனின் விருச்சிக சஞ்சாரம் அரசியல் துறையில் அவருக்கு அதனுடைய ஆதிபத்யம் வரும்பொழுது பிரகாசிக்க வைக்கும். அதே நேரத்தில், ஆணையிடக்கூடிய 'தைரியகாரகன்' செவ்வாய் 6 ஆம் இடத்தில் உச்சம் பெறுவது மிகுந்த யோகம்தான். 'அதிகாரத்துவ யோகம்' இதன் மூலம் அவருக்கு அமைகிறது.


ராகு - கேதுக்களுக்கு இடையில் சகல கிரகங்களும் சஞ்சரிப்பதால் அது 'கால சர்ப்ப' யோகமாகும். இளமைக் காலத்தில் சோதனையும், 30 வயதிற்கு மேல் சாதனையும் நிகழ்த்தினார்.

4,9 இற்கு அதிபதியான செவ்வாய் 6 இல் உச்சம் பெற்று 9 ஆம் இடத்தைப் பார்ப்பதால் போக்குவரத்துத் துறையில் ஆரம்ப காலத்தில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு அமைந்தது.

சந்திரனுக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் புதனும், சுக்ரனும் இணைந்து தர்மகர்மாதிபதி யோகத்தை உருவாக்கி குரு வீட்டில் சஞ்சரிப்பதால், தான தர்மங்கள் செய்யும் குணம் இவருக்கு இயற்கையிலேயே அமைந்தது. பதவிக்காசைப்படாமல், உதவி செய்ய ஆசைப்படும் உத்தமராக விளங்க காரணம் 'சந்திர மாங்கள யோகம்' இவரது ஜாதகத்தில் அமைந்துள்ளது.

சப்தம ஸ்தானத்தில் உள்ள ராகு பலம் பெற்றதால் தான் காதல் மணமாக, கலப்பு மணத்தை செய்து கொண்டார். புத்திர ஸ்தானாதிபதி குருவும், ராகுவுடன் கூடியதால் இவரது மகளும் காதல் கலப்பு மணம் செய்து கொள்ளும் வாய்ப்பு உருவாகியது.

**உலகப்புகழ்**



165

புத்திர ஸ்தானத்தில் கலைஞன் சுக்ரனும், வித்யாகாரகன் புதனும் கூடியதால் இவரது இரண்டாவது புதல்வியும் கலைத்துறையில் பிரகாசிப்பதோடு, தந்தையின் புகழைப் போல தானும் உலகளாவிய புகழ பெறும்சூழ்நிலை உருவாகப் போகிறது. தற்சமயம் இவருக்கு சனி திசை நடக்கிறது. வாக்கு ஸ்தானத்தில சனி பலம் பெறுவதால் இவரது சொல்வாக்கை கேட்க காத்திருபபவர்களின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் அமையப்போகிறது.

**ராஜ யோகம**

12 இற்கு அதிபதி சந்திரன் 6 இல் இருப்பதால், 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்ற வாசகத்தின்படி 'ராஜயோக வாழ்க்கை' இவருக்கு அமைந்தது.

வீடு, நில புலன்களின் சேர்க்கை, அதிர்ஷ்ட வாய்ப்புகள், வாகன யோகம், ஆன்மீகச் சிந்தனை, மனிதநேயம், அள்ளிக்கொடுக்கும் நல்ல உள்ளம், நன்றி மறவாத்தன்மை, எதிரிகளை வெல்லும் ஆற்றல், தர்ம சிந்தனை, புகழ், கீர்த்தி, பொது நலத்தில் அக்கறை, அனைத்தும் ஜென்மக் கேதுவினால், சிறப்பாக அமைகிறது. தர்ம ஸ்தாபனங்களுக்கு பொறுப்பேற்கும் வாய்ப்பும் வழங்கும்.

**அரசியலா? ஆன்மீகமா?**

துரித முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பதன் மூலமும், சொந்த எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமும், சர்ப்ப சாந்தி வழிபாடுகளின் மூலமும், நடக்கும் சனி திசையை நல்ல திசையாக மாற்றியமைத்துக் கொள்ள இயலும்.

'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு தொடர், இத்துடன் நிறைவு பெறுகிறது.

*(முற்றும்...)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-173**

ஒறக்கம் வராம உருண்டு பெரண்டு கெடந்தவ நடுச் சாமத்துல எந்திரிச்சு உக்காந்துட்டா இத்த போர்வைய எறிஞ்சுட்டு.

உள் வீட்டுக்குள்ள போனா. அடுக்குப்பானைய ஒவ்வொண்ணா எறக்கி மூணாம் பானைய தொறந்தா. அதுலயிருந்து ஒரு பொருள் எடுத்த கை நடுங்க அத தொட்டுத் தொட்டு பாத்தா. பெறகு மூக்குக்கிட்ட வைச்சு மோந்து மோந்து பாத்தா; அவ நெனச்ச வாசனை அடிச்சிருச்சு. எடுத்த இடத்தில அந்தப் பொருள வச்சுட்டு ஆனந்தமா அழுதிட்டு வந்து படுத்துக்கிட்டா.

அது வேறொண்ணுமில்ல. அனாதிக் குடிசையில அழகு சிங்கத்த பெத்துப் போட்ட அன்னைக்கு அவன் தொப்புழ்க்கொடிய அறுத்திட்டு அவ பத்திரமா வச்சிருக்காளே...

அந்தப் பண்ணருவா, விடிய எந்திரிச்சா. சாணிகரைச்சு வாசத் தெளிச்சா. வௌக்கமார எடுத்தா, சல்லுச் சல்லுன்னு கூட்டிப் பெருக்கி குப்பை தள்ளுனா. காடி ஒழுங்கு பண்ணிக் கட்டுத்தொற கழுவுனா.

கொட மெடுத்துக் கழுவிக்குடுத்துக் கொண்ண வாயனத் தண்ணிக்கனுப்புனா.

பால் பீச்ச உக்காந்துட்டா. சட்டுச் சட்னு காம்புல தண்ணியடிச்சு; தண்ணியடி தாங்காம வெளியேறுன ஒரு உண்ணிய நசுக்கி, வெண்ணெ தடவி நாலு காம்ப உருவிவிட்டு, மொதப்பால் பாத்திரத்துர்ல விழுகிற "சொர் சொர்" சத்தத்துல அவ சொக்கி நிக்க, "அழகு சிங்கம் வீடு இதானே'ன்னு கேக்குது அதிகாரமான ஓர் ஆம்பளக்குரல்.

பீச்சுன ஒரு கைப்பால அப்படியே ஒரு ஓரமா வச்சுட்டு தெரச்சுவிட்ட சீலய எறக்கிவிட்டு மாராப்ப ஒழுங்குப்பண்ணி, முந்தானைய எடுத்து மூஞ்சி துடைச்சுக்கிட்டே வாசப் பக்கம் வந்து பாத்தா.

ஊர்ப்பெருசுகளோட ஆணும் பொண்ணுமா இருபது முப்பது தலைக கூடி நிக்குதுக. அதுல ரெண்டே ரெண்டு பேர்தான் அசலூர் ஆளுக. ஒருத்தன் அன்னாச்சித் தலை



யாரி அமாவாசி. இன்னொருத்தன் ஆளு அடையாளம் புடிபடல. அவ வாங்கன்னும் வீட்டுக்குள்ள கூப்பிட்டும் வராம வாசல்லயே நிக்கிற வந்த சனம். "விடிய என்னப்பா இத்தன பேரு... வெவரம் சொல்லுங்க கருவாச்சி பதறி நிக்கிறா."

மருகி மருகி அன்னஞ்சித் தலையாரி ஆரம்பிச்சான்.

"யாத்தா! வந்திருக்கிறவரு வாலாந்துார்த் தலையாரி மொக்கச்சாமி. ஒரு தாவா விசயமா நம்ம வீட்டுக்கு வந்திருக்கா."

"என்னப்பா தாவா? சொன்னாத்தானே தெரியும்" அடித் தொண்டையில கேக்குறாரு இருளப்பக் கோடங்கி.

"இது சொக்கத் தேவன்பட்டிதானா?" வாலாந்துார்த் தலையாரி வெறைப்பாக கேக்குறாரு. "சொல்லியா தெரியணும்... செக்கத் தேவன்பட்டி."

"காளியம்மன் கோவில் தெருவு. கதவு எண் பன்னன்டும் இதானே?"

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாணத்தில்

# காலாண்டில் 561 சிறார்களுக்கு எதிராக வன்முறை,துஷ்பிரயோகச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் கடந்த காலாண்டில் மட்டும் 561 சிறுவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள் ளதாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை பிரி வின் புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அந்த வகையில் 2015 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் பாலியல் துஷ்பிரயோகங்கத்துக்கு உட்படுத்தப்பட்டு 23 பேரும் பெற்றோரால் கைவிடப்பட்டு 38 சிறார்களும் பயமுறுத்தலால் பாதிக்கப் பட்டு 2 சிறுவர்களும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட 5 சிறுவர்களும் சிறுவயதில் விவாகம் செய்த 21 சிறுவர்களும் பாடசாலை மற்றும் வீடுகளில் இருந்து வெளியேற்றப் பட்டு 48 சிறுவர்களும் பெற்றோர் இல்லாமல் 225 சிறுவர்களும் அங்கவீனமுற்றவர்களாக 76 சிறுவர்களும் தத்தெடுக்கப்பட்டு 23 சிறுவர்களும் சிறுவர் தொழிலாளர்களாக 2 சிறுவர்களும் நீதிமன்ற வழக்குகளில் 54 சிறுவர்களும் உதவிகள் பெற்றுக்கொள்பவர்களாக 49 சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்டு 47 சிறுவர்களும் உள்ளார்கள்.

வடக்குமாகாணத்தில்யாழ். மாவட்டத்தில் மட்டுமே அதிகள்விலான சிறுவர்களும் நீதிமன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள்.

மன்னார் மாவட்டத்திலும் வவுனியா மட்டத்திலும் பெற்றோரை இழந்த சிறுவர்கள் (203) அதிகளவாக காணப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான அங்கவீனமுற்ற சிறுவர்கள் (33) காணப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான பாடசாலை விட்டு இடை விலகிய சிறுவர்கள் (31) காணப்படுகின்றனர்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் அதிகளவான பாலியல் துஷ்பிர யோகம் (10) சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை சிறுவர் வன் முறைகளுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் வடக்கு மாகாண ஆணையாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

பொதுமக்கள் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் தொடர்பாக கூடிய அளவு விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

பொலிஸ் நிலையங்களில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பெண் பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். வடமாகாணத்தில் அதிகளவாக தமிழ் பெண் பொலிஸார் இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தால் கூடிய அளவு பயனுடையதாக இருக்கும்.

வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் எவ்வாறு நடைபெறும் என்று சிறுவர்களுக்கு தெரியாது. அதேபோல் பெற்றோர்களுக்கு எவ்வாறு அந்த சம்பவங்களை உரிய முறையில் உரியவர்களுக்கு தெரியப்படுத்துவது என்பது தெரியாது. இதனால் பல துஷ்பிரயோக சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன. அதன்காரணமாக பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர்.

கூடுதலாக உறவினர்களுக்கிடையே துஷ்பிரயோக சம்பவங்கள் நடைபெறுவதால் குடும்பமானம், கலாசாரம் என்பவற்றுக்கு முக்கியம் அளித்து பலர் இவ்வாறான சம்பவங்களை மூடி மறைக்கின்றனர். இதனால் பல விபரீதமான முடிவுகள் தனிப்பட்ட ரீதியில்சிறுவர்கள் எடுப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்துகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் விரைவாக நிறைவு செய்யப்படாமல் நீண்டு கொண்டு செல்வதாக உரிய தீர்வு கிடைக்கப் பெறுவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் குறித்த வழக்குகளில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளும் நிலை ஏற்படுகின்றது. வைத்தியசாலைகள் பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றில் பெண் பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளை கேட்டு கற்பதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதால் உண்மையான விளக்கமான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்கு ஏற்ற நிறுவனங்கள் எமது பிரதேசங்களில் குறைவாகவே காணப்படுகின்றது.

சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள் உரிய அதிகாரிகள் உரிய முறையில் மேற்கொள்வதும் பெற்றோர்கள் மத்தியில் கூடிய விழிப்புணர்வுகளை மேற்கொள்ளும் போதே இவ்வாறான சம்பவங்களை குறைத்துக் கொள்ள முடியும் என அவர்மேலும் தெரிவித்தார்.(இ-9)

# இன்று சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

போதைப்பொருள், சமூகத்தை முற்றிலும் அழிக்கும் ஒரு கொலைகாரனை போன்றது. அனைத்து வகையான நோய்களுக்கும்முன்னோடியாக இருப்பது போதைப்பொருள் பயன்பாடு. போதைப் பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பது மற்றும் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன் ஆண்டுதோறும் ஜூன் 26ஆம் திகதி "சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம்" கடைப்பிடிக்கப்படுகிறது.



போதைப்பொருட்களை பயன்படுத்துதல், போதைப்பொருடகளை கடத்துதல், போதைப்பொருள் விற்பனை ஆகியவற்றை ஒழிக்க கடுமையான சட்டங்கள் மூலம் அனைத்து நாடுகளும் பல்வேறு முயறசிகள் எடுத்து வருகின்றன. ஆனாலும் இதன் பயன்பாடு அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை. தினமும் போதைப்பொருள் கடத்தல சம்பவங்கள் உலகில் ஆங்காங்கே நடக்கின்றன. புது தொழில் நுட்பத்தை பயன்படுத்தி போதைப் பொருட்களை கும்பல் கடத்து கிறது.

ஹெராயின், அபின் , கஞ்சா உள்ளிட்ட பலவகையான போதைப் பொருட்கள் உலகில் சட்டத்துக்கு புறம்பாக வற்பனை செய்யப்படுகிறது. போதைபபொருள் பயன்படுத்தி, அவர்களை மட்டுமல்லாமல், தங்களை சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சீரழிக்கின்றனர். சிலர் போதைப் பொருட்கள் பயன்படுத்தாமல் இருக்க முடியாத அளவுக்கு, அதற்கு அடிமையாகி உள்ளனர். இன்றைய சூழலில் இளைஞர்கள் மட்டுமல்லாமல், பாடசாலை மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாவது வருத்தமான விடயம். இம்மாதிரியான மாணவர்களுக்கு சரியான விழிப்புணர்வு வழங்கி அப்பழக்கத்தில் இருந்து அவரகளை விடுவிக்க வேண்டும்.

அரசு ஒருபுறம் இதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும், இச்செயலில் ஈடுபட்டோர் தானாக மனம் திருந்தி இதிலிருந்து விடுபட இந்நாளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆண்... இனிய இல்லத்தின் தூண். குடும்பத்தை வழிநடத்தும் "ஆணிவேர்". ஆணிவேர் நன்றாக இருக்கும் வரை, குடும்பமும் நன்றாக இருக்கும். மது, கஞ்சா, சிகரெட்... என ஆண்களை சீரழித்து, அவர்தம் குடும்பங்களை சீர்குலைக்கும் விடயங்கள் சமுதாயத்தில் அதிகம்.

நல்ல வேலையை இழந்து, மனைவியிடம் மதிப்பிழந்து, பிள்ளையிடம் மரியாதை இழந்து, சமுதாயத்தில் பெயர் இழந்து, "மனிதன்" என்ற தகுதியை மொத்தமாக இழக்கச் செய்துவிடுகிறது "போதை". போதையின் பாதையில் சென்று, மறுவாழ்வின் மூலம் குடும்பத்துடன் சந்தோஷமாக இணைந்த ஆடவர்களின் அனுபவங்கள், நம் ஒவ்வொருவருக்கும் பாடம்.

போதையால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து, மனநல டாக்டர் ஆர். ரத்னவேல் கூறியதாவது, போதை என்பதும் ஒருவித நோய் தான். மது, ஊக்கமருந்து, கஞ்சா, கொக்கோ, ஒயிட்னர், தின்னர், புகையிலை, பீடி, சிகரெட், மயக்க, தூக்க மருந்துகள், வலி நிவாரணிகள் அனைத்துமே போதை ஏற்படுத்தக் கூடியவை. மருந்துகள் அனைத்துமே நோயை குணப்படுத்த கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதை அளவுமீறி பயன்படுத்தி, போதை மயக்கத்திற்கு ஆட்படுகினறனர். பெரியவர்கள் மட்டுமின்றி, பாடசாலை மாணவர்கள் கூட இப்பழக்கத்திற்கு ஆளாகின்றனர். ஒயிட் னர், தின்னர், நகப்பாலீஷ், இருமல் மருந்து, மயக்க மருந்துகளை மாணவர்கள் பயன்படுத்துவது முதலில் தெரியாது. அதற்கு அடிமையாகும் போது, பதற்றம், சந்தேகம், காதில் யாரோ பேசுவது போன்ற தோற்றம், தனிமையை விரும்புவது போன்ற பிரச்சினைகள் ஏற்படும். கையில் காசு இல்லாத போது, வீட்டில் பொருட்களை திருடுவர். இளம் குற்றவாளிகள் உருவாவதற்கு இதுவும் காரணம். போதை பழக்கத்தால் உச்சி முதல் உள்ளங் கால் வரை உடலும், மனதும் பாதிக்கப்படும். முறையான, தொடர சிகிச்சையின் மூலம் யாரையும் நல்வழிப்படுத்தலாம். போதைப் பொருள் பயன்படுத்து வதால் ஏற்படும் விளைவுகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஜூன் 26ம் திகதி போதைப் பொருள் ஒழிபபு தினம்கடைப்பிடிக்கப்படுகிறது

இணையம்



கரணவாய் அண்ணாசிலையடி வள்ளுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரான மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகம் ஆசிரியர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கயிறிழுவைப் போட்டியையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கலை இலக்கியப்பேரவையின் ஆய்வரங்கமும் கலை நிகழ்வுகளும்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 42 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய தேசிய மாநாடு 27, 28 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு தினங்களில்) இல. 62, கொக்குவில் சந்தி, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாண பிராந்திய பணி மனை யில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

"மனிதரும் சூழலும்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் இம் மாநாட்டின் பிரதான நிகழ்வுகளாக ஆய்வரங்கமும், புது வசந்தம் - 2015 ஆண்டு மலர் வெளியீடும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 8.30 மணியளவில் ஆரம்பமாகும் முதலாம் நாள்நிகழ்வின், காலை அமர்வில் பேரவை உறுப்பினர்களுக்கான விசேட மாநாடு இடம்பெறும். இதில் பேரவைக்கான புதிய நிர்வாக தெரிவும், பேரவையின் கடந்த கால, எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும்.

முதலாம் நாள்மாலை நிகழ்வுகள் பி.ப. 4.30 மணிக்கு பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சி.சிவசேகரத்தின் தலைமையில் இடம்பெறும். பிரதான நிகழ்வாக புது வசந்தம் - 2015 ஆண்டு மலர் வெளியீடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகளாக மாத்தளை செங்கதிர் கலைக்குழுவினர் வழங்கும் ஒயிலாட்டம், கும்மி ஆகியனவும், நுவரெலிய பிரதேசப் பேரவையினர் வழங்கும் நாடகமும் இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகும் இரண்டாம் நாள் நிகழ்வில் காலை அமர்வில் "மனிதரும் சூழலும்"என்ற தலைப்பிலான ஆய்வரங்கு இடம்பெறும். பேரவையின் தலைவரான பேராசிரியர் சி.தில்லைநாதனின் தலைமையில் இடம்பெறும் இவ் ஆய்வரங்கில் 'தமிழ் இலக்கியத்தில் சூழலியல்' எனும் தலைப்பில் ச.சத்தியதேவன் ஆய்வுரை ஆற்றுவார். தொடர்ந்து கருத்துரையை தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.தணிகாசலம் வழங்குவார். 'கடல்வளக் கொள்ளை: பிராந்திய நல னும் மீனவர் வாழ்வும்' எனும் தலைப்பில் ஆய்வுரையை தெ.ஞால சீர்த்தி மீநிலங்கோவும் கருத்துரையை கலாநிதி ச.சிறிகாந்தனும் ஆற்றுவர். 'குடிநீருக்கான எமது உரிமை :சவால்களும் போராட்டங்களும்' என்ற தலைப்பில் ஆய்வுரையை வைத்திய கலாநிதி சிவசங்கரும் கருத்துரையை பேராசிரியர் சிவச்சந்திரனும் ஆற்றுவர்.

தொடர்ந்து ஆய்வரங்கின் பிற்பகல் அமர்வு பி.ப. 01.30 மணியளவில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கலலூரியின் பீடாதிபதி சிவ. இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும். இதில் 'சூழலியலும் உலக மயமாக்கலும்' எனும் தலை ப்பில் ஆய்வுரையை தி.அனோஜன்,கருத்துரையை சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோரும் ஆற்றுவர். 'மலையகமும் மண் சரிவும் - மக்கள் வாழ்வும்' எனும் தலைபபில் ஆய்வுரையை மை.பனனீர்செல்வம், கருத்துரை யை ஜெ.சற்குருநாதனும் ஆற்றுவர்.

பி.ப 5.00 மணியள வில் ஆரம்பமாகும் இரண்டாம் நாள் மாலை கலை நிகழ்வுகள் க.சிவகரன் தலைமையில் இடம்பெறும். இதில் வாழ்வக மாணவர்கள் வழங்கும் நாட்டார் பாடல்களும், கொழும்புப் பிரதேசப் பேரவையினர் வழங்கும் விசேட கவியரங்கமும், யாழ்ப்பாணப் பிரதேசப் பேரவையினர் வழங்கும் நாடகமும் இடம்பெறும்.

அனைத்து கலை இலக்கிய ஆர்வலர்களையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 45 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 300 | 160 | 200 |
| தக்காளி | 120 | 100 | 100 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 80 | 40 | 50 |
| கோவா | 120 | 90 | 100 | 80 | 80 |
| கரட் | 250 | 200 | 240 | 160-250 | 150 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 70 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 110 | 150 | 120-160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 230 | 120 | 100-150 | 160 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 120 | 100-160 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 80 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 150 | 120 | 120 | 140 | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 160 | 140 |
| பீற்றூட் | 150 | 110 | 160 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 170 | 200 | 120-140 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 400 | 400-600 | 600 |
| போஞ்சி | 200 | 200 | 320 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 | — | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 160 | 120 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 45 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 130 | 150 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 180 | — | 180 |
| முள்ளங்கி | 120 | 70 | 100 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# யாழ்.வணிகர் கழகத்தின் பிரதிநிதிகளுக்கும் இரும்பு வியாபாரிகளுக்குமிடையே சந்திப்பு

யாழ்ப்பாண வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் யாழ். இரும்பு வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும்இடையில்நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை யாழ்.வணிகர் கழக பணிமனையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது 19.06.2015 அன்று யாழ். வணிகர் கழக பணிமனையில் யாழ்.பொலிஸ் தலைமையக பரிசோதகருக்கும் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கும் இடையிலான கூட்டத்தின் போது பழைய இரும்பு சேகரிக்கும் வியாபாரிகள் வீடுகளில் சென்று கொள்முதல் செய்வது தொடர்பாக பொதுமக்களால் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.


இம்முறைப்பாடு காரணமாக ஒழுக்கக் கட்டுப்பாடுகளுடன் முறையாக பழைய இரும்பு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள், ஒருசிலர் தவறு செய்திருக்கக்கூடும், அதற்காக ஒழுங்குமுறையாக இரும்பு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படையக் கூடாது. ஆகையால் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் பழைய இரும்புகள் சேகரிக்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதை யாழ்.வணிகர் கழகம் ஆட்சேபிக்காது என்பதை பொதுமக்களுக்கு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 413


மது மதுமிதா




பாலன் குமார்





மிது மிதுர்சா




லக்ஸ்மன் லவண்




தரணிவாஸ் சிதம்பரம்



க்ரோலின் செனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புயலைக் கிளப்பி விட்டுள்ள அமெரிக்கா!

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தீவிரவாத முறியடிப்புக்கான பிரிவு கடந்த 19 ஆம் திகதி வோஷிங்டனில் வெளியிட்ட அறிக்கை இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தீவிரவாதம் தொடர்பான இந்த அறிக்கை அமெரிக்காவினால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வரும் ஒன்றாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வெளியிடப்படும் இந்த அறிக்கையில், உலகில் உள்ள நாடுகளில் தீவிரவாதம் தொடர்பான செயற்பாடுகள் குறித்தும் அமெரிக்காவினால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்தும் விபரிக்கப்படுவது வழக்கம்.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் பெரும்பாலும் மாற்றப்படுவதில்லை.

பிந்திய நிலைமைகளை உள்ளடக்கிய சிறிய மாற்றங்கள் மட்டும் இதில் ஆண்டுதோறும் இடம்பெறும். மற்றெல்லாப் பகுதிகளும் வழக்கம் போலவே இருக்கும். இம்முறை அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையிலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்காவினால் வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்ட விடுதலைப் புலிகள் பற்றிய அறிக்கையில் ஒரு சிறிய பந்தி மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதில் மலேசியாவில் 2014 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பலர் இந்தியாவில் உள்ள அமெரிக்க, ஸ்ரேலிய இராஜதந்திர மையங்களை தாக்கத் திட்டமிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அதைவிட, கடந்த சில வருடங்களில் கூறப்பட்டது போன்றே 2014 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு ஆதரவு தொடர்ந்து செயற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மற்றும்படி, அமெரிக்காவின் அறிக்கையில் சிறிலங்கா குறித்த பகுதியில் விடுதலைப புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதான எந்தக் கருத்தும் இடம்பெறவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் பற்றி அமெரிக்கா குறிப்பிட்ட பகுதிகளை வைத்து இலங்கையில் எதிர்க்கட்சிகள் பெரும் புயலை கிளப்பியிருக்கின்றன. இது அரசாங்கத்துக்கும் பெரும் சங்கடத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கவுள்ள சூழலில் விடுதலைப் புலிகளையும் இனவாதத்தையும் முன்னிறுத்தி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தலையெடுக்க முயற்சிக்கும் சூழ்நிலையிலேயே அமெரிக்காவின் இந்த அறிக்கை வெளியானது.


இதுபோன்ற கருத்துக்கள் மஹிந்த ராஜபக்ஷ தரப்பை ஊக்கப்படுத்தும். அவர்கள் இதனை பூதாகாரப்படுத்துவார்கள் என்பதை அமெரிக்கா அறியாதிருக்கும் எனக் கருத முடியாது. ஆனாலும், அமெரிக்கா இந்தக் கட்டத்தில் சர்ச்சைக்குரிய விடயங்களை ஏன் சேர்த்துக்கொண்டது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

மலேசியாவில் 13 விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டதான ஒரு தகவல் அமெரிக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அது கடந்த ஆண்டு மே மாதம் மலேசியாவில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று கைதுசெய்யப்பட்ட நால்வரையே குறிப்பிடுவதாக கருதப்படுகிறது. இவர்கள் பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். ஆனால், 13 பேர் கைது செய்யப்பட்டதாக அமெரிக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது பற்றி இலங்கை அரசாங்கமோ, மலேசியாவோ எந்த தகவலையும் ஒருபோதும் வெளியிடவில்லை.

அடுத்து மலேசியாவில் கைது செய்யப்பட்ட புலிகள் அல்லது புலிகளின் ஆதரவாளர்களுக்கும் தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்க, ஸ்ரேலியத் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டவர்களுக்கும் தொடர்பு உள்ளதாக இதுவரை எந்த தகவலும் வெளியாகியிருக்கவில்லை.

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம், பெங்களூரில் உள்ள ஸ்ரேலியத் தூதரகம் ஆகியவற்றைத் தாக்கத் திட்டமிட்டதாக மலேசியாவில் கைது செய்யப்பட்டவர்கள் பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. முகவர்களே தவிர, விடுதலைப் புலிகள் அல்ல.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் ஒருபோதும் இந்த தாக்குதல் திட்டத்துடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தியிருக்கவில்லை.



ஆனால், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. இது, அமெரிக்கா வெளியிடும் அறிக்கைகளின் உண்மைத்தன்மைகள் மீதும் சந்தேகங்களை எழுப்ப வைக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது. அதேவேளை, விடுதலைப் புலிகளின் நிதி ஆதரவு வலையமைப்பு தொடர்ந்து செயற்படுவதாக அமெரிக்கா முன்னைய ஆண்டுகளில் வெளியிட்ட அறிக்கைகளிலும் கூறியிருந்தது. அது இந்த ஆண்டு அறிக்கையில் புதிதாக இடம்பெற்ற விடயம் அல்ல. எனினும், எதிர்க்கட்சியினர், விடுதலைப் புலிகள் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதாக அமெரிக்காவே அறிவித்துவிட்டது என்று பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இது குறித்து அவசரமாக அமைச்சரவை கூட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால, அவ்வாறு நடக்கவில்லை என்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின், ஆறு மாதங்களுக்கு முன்னர்வரை வெளிவிவகார அமைச்சராக இருந்த அவருக்கு விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புகள் இன்னமும் முற்றாக அழிந்துவிடவில்லை என்பது தெரியாமலா இருந்திருக்கும்? அது போலவே, முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ஷ, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து வந்திருப்பதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவரும் அமெரிக்க அறிக்கையை மேற்கொள்காட்டியிருக்கிறார்.

இதற்கு முன்னர் அமெரிக்கா வெளியிட்ட பல அறிக்கைகளை அவர் கேலி செய்திருந்தார். விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டிருந்தாலும், பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும் ஏற்படுத்தப்படாவிட்டால் மீண்டும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் இலங்கையில் போர் வெடிக்கும் என்று அமெரிக்கா கூறிய போது, அவ்வாறு நிகழாது என்று அடித்துக் கூறியவர் அவர்.

இனிமேல் புலிகள் தலையெடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறிவந்த அவர், பின்னர் ஒரு கட்டத்தில் அரசியல் நலன்களுக்காக புலிகளால் ஆபத்து இருப்பதாக கூறத் தொடங்கினார். முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுடன் அவரது ஈழக்கனவும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டதாக மார்தட்டிய அவரே, இப்போது ஈழக்கனவை நிறைவேற்றுவதற்கு பலரும் வெளிநாடுகளில் காத்திருப்பதாக கூறியிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்னர்வரை தனக்கு புலனாய்வு அறிக்கைகள் கிடைப்பதில்லை என்பதால் நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று செய்தியாளர்களிடம் கூறிய கோத்தபாய ராஜபக்ஷவே, அமெரிக்க அறிக்கையை மேற்கொள் காட்டி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறியிருக்கிறார். அதுமட்டுமன்றி, கேந்திர முக்கியத்துவமான இடங்களிலிருந்த இராணுவ முகாம்களை அரசாங்கம் அகற்றி விட்டதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இராணுவத் தலைமையகமோ, 2015 ஆம் ஆண்டில் எந்தவொரு முகாமும் அகற்றப்படவில்லை என்று உறுதியாக கூறியிருக்கிறது. ஆனால், அதற்கு முரணாக கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார். அவ்வாறாயின், இராணுவத் தலைமையகம் கூறுவது பொய் என்று கோத்தபாய ராஜபக்ஷ ஏற்றுக்கொள்வதாகிவிடும். எவ்வாறாயினும், தீவிரவாதம் தொடர்பான அமெரிக்காவின் அறிக்கை இலங்கை அரசியலில் பெரும் புயலைக் கிளப்பி விட்டிருப்பது உண்மை.

அதுவும் நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகின்ற சூழலில் புலிப் பூச்சாண்டி அரசியலுக்கு காத்திருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு இது எதிர்பாராமல் கிடைத்த 'ஜாக்பொட்'டாகவே கருதவேண்டும்.

அமெரிக்க அறிக்கையை வைத்தே மஹிந்த ராஜபக்ஷ அணி நாடாளுமன்றத் தேர்தல் வரை அரசியல் ஆதாயம் தேடப்போகிறது. மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிப்பதில் அமெரிக்கா பெரும்பங்கு வகித்ததாக பரவலான கருத்து உள்ளது.

எனவே, மஹிந்த ராஜபக்ஷவின் மீள் அரசியல் வருகையைத் தடுப்பதற்கும் அமெரிக்கா கவனம் செலுத்தும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அமெரிக்கா வெளியிட்ட தீவிரவாதம் குறித்த அறிக்கையே மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் உயிர்ப்பிக்கப் போதுமான ஒன்றாக மாறியிருக்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் இந்தப் புலிப்பூச்சாண்டிக்கு அதிகம் மதிப்பு உள்ளது. முன்னர், புலிகளைத் தோற்கடித்த பெருமையை வைத்து அரசியல் நடத்திய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இனிமேல் புலிகள் வரப் போகிறார்கள், அதனைத் தடுக்க தம்மை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று கோரி அரசியல் நடத்தும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

விடுதலைப் புலிகள்தான் கொழும்பு அரசியலில் மிகவும் பெறுமதியான அரசியல் மூலதனமாக மாறியிருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கம் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், அவர்களை வைத்து அரசியல் நடத்தும் போக்கு மட்டும் மாறவில்லை.

அடுத்த 10, 20 ஆண்டுகளுக்கு பின்னரும்கூட விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் நடத்தும் போக்கு மாற்றம் காணும் என்று எதிர் பார்க்க முடியாது. அமெரிக்கா போன்ற நாடுகளால் வெளியிடப்படும் அறிக்கைகளும் இந்த புலிப் பூச்சாண்டி அரசியலுக்கு ஒரு காரணம்.

அமெரிக்க அறிக்கை ஆண்டு தோறும் வழக்கமாக இந்தக் காலத்தில் வெளியிடப்படும் ஒன்றாக இருந்தாலும், தற்போதைய நிலையில் இந்த அறிக்கை புலிப்பூச்சாண்டி அரசியலுக்கு துணைபோவதாக அமைந்திருக்கிறது. இப்போது கொழும்பு அரசியலில் எங்கு பார்த்தாலும், அமெரிக்க அறிக்கையை மேற்கொள்காட்டி, புலிகள் வரப்போகிறார்கள் என்ற செய்தியும் பரப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்தக் கட்டத்தில் வடக்கிலிருந்து அரசாங்கம் இராணுவ முகாம்களை அகற்றி அவர்களின் மீள் எழுகைக்கு இடமளிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இதனை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியாமல் திணறுவதையும் அவதானிக்க முடிகிறது. எனினும், அமெரிக்காவை பொறுத்தவரையில் இந்த ஆண்டுக்கான அறிக்கையில் புதிய உட்சேர்க்கைக்கு பலவீனமான தகவல்களை முன்வைத்திருக்கிறது.

எதற்காக அமெரிக்கா இவ்வாறு ஒரு அறிக்கையை வெளியிட்டது என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் உள்ளது. புதிய அரசாங்கத்தின் மீது அதிகம் நம்பிக்கை கொண்ட நாடாக அமெரிக்காவே இருந்து வரும் நிலையில், அமெரிக்காவின் அறிக்கையில் புதிய அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இது இலங்கை அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதையும் விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் அமெரிக்கா அறிந்தேயிருக்கும். விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்த விவகாரம் கூடுதல் தாக்குதல் செலுத்தினால், தற்போது அமெரிக்கா தலையில் வைத்துக் கொண்டாடும் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க கூட்டு அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்பதையும் அமெரிக்கா அறியும். இருந்தாலும், இந்த அறிக்கையை வெளியிட்டு புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது அமெரிக்கா.

இது திட்டமிட்டு வெளியிட்ட அறிக்கையல்ல என்றாலும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கவனக்குறைவு என்று இலகுவாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசாங்கம் தோற்கடிக்கப்படுவதை அமெரிக்கா விரும்பாது என்ற கருத்தே இருந்து வந்த நிலையில், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் அந்த நிலைப்பாட்டை சந்தேகிக்க வைக்கின்றன.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகள் தொடர்பாக அமெரிக்கா தனது அறிக்கையில் முன்வைத்திருக்கின்ற தகவல்களின் விளைவுகளை அமெரிக்காவும் அனுபவிக்க நேரிடலாம். ஏனென்றால், இந்த விவகாரம் இப்போதைக்கு ஓயப்போவதில்லை.

ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷ தரப்பு, விடுதலைப் புலிகள் மற்றும் இனவாதம் ஆகியவற்றை மூலதனமாக்கியே அரசியல் நடத்த தொடங்கியிருக்கிறது. இந்தச் சூழலில் அமெரிக்க அறிக்கை மஹிந்த ராஜபக்ஷ தரப்பை இன்னும் உசுப்பேற்றி விட்டிருக்கிறது.

பழம் நழுவிப் பாலில் விழுந்திருக்கின்ற நிலையில், மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வேடிக்கை பார்க்கும் என்று கருத முடியாது. இது நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தில் இடியாக இடிக்கப் போகிறது. அதன் விளைவு ஒருவேளை, தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்தவும் கூடும். அவ்வாறு நிகழ்ந்தால், அதன் தாக்கம் அமெரிக்காவிலும் எதிரொலிக்கும். ஏனென்றால் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலை ஒன்று உருவானால், அந்த அரசாங்கம் மேற்குலகத்தைச் சார்ந்து செயற்படும் ஒன்றாக இருக்காது. சீனாவைச் சார்ந்த ஒன்றாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெ.அறிக்கையை வைத்துக்கொண்டு இலங்கையில் அரசியல் பேசப்படுகிறது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பாதுகாப்பு அறிக்கையை வைத்துக்கொண்டு இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்று அரசியல் பேசுவது அடிப்படையற்ற செயல் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாட்டின் தேசிய பாதுகாப்பை பொறுத்தவரை அதனை ஜனாதிபதியும் தாமும் பிரதமரும் உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடுகளுக்கு பல விஜயங்களை மேற்கொண்டு சர்வதேச வலையமைப்பை வலுப்படுத்தி வருகிறார்.

இதன் அடிப்படையில் பயங்கரவாத வலையமைப்பை நலிவடையச்செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது

இந்தநிலையில் அமெரிக்காவின் அறிக்கையை கவனமாக பரிசீலித்து அதன் அடிப்படையில் தேசிய பாதுகாப்பை ஆபத்து இல்லாத அடிப்படையில் உறுதிப்படுத்தும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் பணத்தை வீணடிக்க வேண்டாம்

## ஜனாதிபதி வேண்டுகோள்

பொது மக்களின் பணத்தை சுவரொட்டிகளுக்காகவும், பதாதைகளுக்காகவும் வீணடிக்க வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு நிரோகா என்ற புதிய அதிர்ஷ்ட இலாப சீட்டு அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போது சுவரொட்டிகளுக்காகவும், பதாகைளுக்காகவும் பல பில்லியன் ரூபாயகள் செலவிடப்பட்டுள்ளன.

இதற்காக அரசாங்க நிறுவனங்களில் உள்ள பொதுமக்களின் நிதி ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து அந்த நிதியை பொதுமக்களின் நலனை மேம்படுத்துவதற்காக பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வடக்கு, கிழக்கிற்கு

# சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென 15 வெளிநாட்டவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிற்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென 15 வெளிநாட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சர்வதேச சமூகத்திடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ரொம்சே க்ளார்க் உள்ளிட்டவர்கள் இவ்வாறு முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறு இலங்கைக்கு எதிராக கோரி வரும் நபர்கள் பற்றிய விபரங்களை அரசாங்கம் திரட்டியுள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றின் முன்னாள் உறுப்பினர் ரொபர்ட் ஈவன்ஸ், சூடான் விடுதலை இயக்கத்தின் டெனியல் மாசன், அவுஸ்திரேலியாவின் பிரயன் செனவிரட்ன உள்ளிட்ட புலி ஆதரவாளர்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக போர்க்குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

அரசாங்கம் மற்றும் படையினருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை வழங்க வேண்டுமென இந்த வெளிநாட்டவர்கள் கோரியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# பங்களாதேஷ் அரசியல்வாதிகளால் கறுப்புப்பணம் இலங்கையில் முதலீடு

(கொழும்பு)

பங்களாதேஷின் அரசியல்வாதிகள் அங்குள்ள கறுப்புப்பணத்தை இலங்கையில் முதலீடு செய்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷின் டெய்லி ஸ்டார் செய்தித்தாள் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையில் வியாபாரங்களிலும் எனைய முயற்சிகளிலும் இந்த முதலீடுகள் இடம்பெறுகின்றன.

இதனைத்தவிர, பிரித்தானியா. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, நேபாளம் மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளிலும் பங்களாதேஷின் கறுப்புப்பணம் முதலீடு செய்யப்படுகிறது.

அவாமிலீக் மற்றும் பங்களாதேஷின் தேசியவாத கட்சி ஆகியவற்றின் அரசியல்வாதிகள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக இந்தக் கட்சியினர் ஏனைய நாடுகளில் குடியேறியும் வருகின்றனர் என்றும் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## தங்கம் கடத்த முற்பட்ட 8 இந்தியர்கள் கைது

45 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய தங்கத்தை கடத்த முற்பட்ட எட்டு இந்தியர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று அதிகாலை சென்னை நோக்கி பயணிக்கவிருந்த வேளையிலேயே, கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸலி காமினி தெரிவித்தார்.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமதி 4,520 ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் உடலின் பல்வேறு பகுதிகளில் சூட்சமமான முறையில் தங்கத்தை கடத்த முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## புத்திக் கூர்மை

கத்தியைத் தீட்டாதே! புத்தியைத்தீட்டு என்று ஒரு பெரியவர் புத்தி சொன்னார்.

அதைக் கேட்ட ஒரு சின்னப்பையன் , அது எப்படி பெரியவரே, புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கல்லில் கத்தியை தேய்க்கலாம். புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டுபோய் தரையில் தேய்த்துக் கொண்டிருக்க முடியுமா? என்றான்.

பெரியவர் உடனே, இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு என்று உணர்ந்து கொண்டார்.

அது சரி, அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இதேகேள்வியை சோக்ரடீசிடம் அவருடைய சிஷ்யன் ஒருத்தன் கேட்டான். சோக்ரடீஸ் நிமிர்ந்து சிஷ்யனைப் பார்த்தார். அதற்குப் பின் சொன்னார்.

இதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முதல் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்? என்றார். என்ன செய்ய வேண்டும்? என்று சொல்லுங்கள் என்றான்.

அதோ பார்! அங்கே வயதான பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போ இங்கிருந்து அருகிலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று அவரிடம் கேட்டுக் கொண்டு வா என்றார் சோக்ரடீஸ்.

சரி என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவரிடம் போனான் அவன். அவரிடம் பெரியவரே இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் எடுக்கும்? என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த சிஷ்யன் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் சொல்லவில்லை.

சரி, பெரியவர் ஒரு மாதிரியாக தெரிகிறார். புத்தி சுவாதீனம் இல்லாதவர் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான்.' சிறிது தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார்.

நீ இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச் சேர 5 நிமிடமாகும் என்றார். இப்பொழுது சிஷ்யன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அதன்பின் யோசித்தான். பின் அவரிடமே கேட்டான்.

பெரியவரே இந்தப் பதிலை திரும்பிப் போகவிட்டு அதன் பின் கூப்பிட்டு சொல்கிறீர்களே என்றான்.

பெரியவர் சிரித்தார். அதற்குப்பின் ஏனப்பா... நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படி நீ கிராமத்துக்குப் போய்ச்சேரக் கூடிய நேரத்தைச் சொல்ல முடியும். அதனால் தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து அதன்பின் நேரத்தைச் சொன்னேன் என்றார். சிஷ்யனால் பதிலெதுவும் சொல்ல முடியவில்லை. திரும்பி சோக்ரடீசிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

அதற்குப் பெயர் தான் புத்திசாலித்தனம் என்றார் சோக்ரடீஸ். இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வர வேண்டும் என்பதற்காகத்தான் கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு என்று பெரியவர்களெல்லாம் புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அதையெல்லாம் இந்தக் காலத்தில் யார் கேட்கிறார்கள்?

இந்தக்கால ஆசாமி ஒருத்தர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார். ஏங்க? ஒரு விமானம் இங்கிருந்து புறப்பட்டு 2 மணிநேரத்தில் மதுரைக்குப் போய் சேருகிறது. அப்படியானால் என்னுடைய வயதென்ன? என்றார்.

இது என்ன கேள்வி? இருந்தாலும் இதைக் கேட்டவுடன் அவர் பதில் சொன்னார்.


அப்படியானால் உங்களுடைய வயது இருபது என்றார். எப்படி இவ்வளவு கரெக்டா சொல்கிறீர்கள்? என்றார் இவர்.

வேறொன்றுமில்லை. எங்களுடைய பக்கத்து வீட்டில் முழுப் பைத்தியம் இருக்கிறது. அதனுடைய வயது 40 என்றார் அவர்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கி- மாவை மோதல்!




தமிழ்த் தேசிய அரசியலின் வாக்குப் பெறுமதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் கொள்கின்றார்கள். அதுவே, பெருமளவான விமர்சனங்கள் மற்றும் அதிருப்திகளுக்கு அப்பால் நின்று தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தேர்தல்களில் ஆதரிப்பதற்கு காரணமாக அமைகின்றது.

ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரான தமிழ்த்தேசிய அரசியல் ஸ்திரத் தன்மையை தக்கவைப்பதற்கு தமிழ் மக்களின் இந்த நிலைப்பாடு பெருமளவுக்கு அவசியமானதாகவும் இருக்கின்றது.

ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டு அரசியல் என்பது அறிக்கை மற்றும் தேர்தல்கால ஆர்ப்பரிப்புக்கள் என்கிற நிலைகளிலிருந்து அடுத்தகட்டம் நோக்கி நகர்வதற்கான அறிகுறிகளை காட்டுவதாக இல்லை. மாறாக, தேர்தல் அரசியலின் அழுக்கான பக்கங்களையும் பதவி நோக்கிய சதிராட்டத்தையும் அப்பட்டமாகக் காட்டத் தொடங்கியிருக்கின்றது.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரான சிறிய ஜனநாயக இடைவெளியை(!) அல்லது அப்படியான தோற்றப்பாட்டை, தமிழ் அரசியல் சூழலில் பெருமளவான வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால், அப்படியான வெற்றிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதில், தமிழ்த் தேசிய அரசியலின் சிதைப்புக்கான பக்கங்கள் திறந்துவிடப்பட்டிருக்கின்றதோ என்று அச்சம் கொள்ள வைக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்புக்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இல்லை.

அதுபோல, மக்களின் அரசியல் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்து ஆர்வம் கொள்வதில்லை. மாறாக, மக்களை வாக்களிக்கும் கருவிகளாக மட்டுமே கையாள்கின்றது.

இவ்வாறான நிலைகள் தொடர்ச்சியான பின்னடைவையே தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்படுத்தி வருகின்றன. அரசியல் - இராஜதந்திர நிலைப்பாடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் விளக்கமளிப்பது குறைவு. பல நேரங்களில் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் கூட அது நிகழ்த்தப்படுவதில்லை.

எவ்வளவு விமர்சனங்கள், அதிருப்திகளுக்குப் பின்னரும்கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தங்களுடைய வாக்குப் பெறுமதியாக தமிழ் மக்கள் ஒருங்கிணை ந்து முன்வைப்பதானது, சிங்கள பௌத்த தேசியவாதத்தினாலும் சர்வதேச சதிராடிகளினாலும் அவ்வளவு இரசிக்கப்படும் ஒன்றல்ல. மஹிந்த ராஜபக்ஷ என்கிற பொது எதிரியை வீழ்த்துவதற்கான புள்ளியில் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஒரு பிரிவும், சர்வதேச சதிராடிகளும், தமிழ் மக்களும் இணைந்தார்கள் என்பதை மறுக்க முடியாது.

அந்த நிகழ்ச்சி நிரல் குறிப்பிட்டளவில் முடிந்துவிட்டது (மஹிந்தவின் மீள் வருகைக் கோஷங்களை கட்டுப்படுத்துவது இந்தத் தரப்புக்கு முன்னாலுள்ள பெரும் சவால்). அப்படிப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியத்தினை சல்லடையாக்குவது என்கிற பழைய நிலைப்பாட்டில் சிங்கள பௌத்த தேசியவாதமும் சர்வதேச சதிராடிகளும் எந்தவித விட்டுக் கொடுப்புமின்றி செயலாற்றுவார்கள். அப்படியான, கட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதும் எதிர்கொள்கின்றது.

மைத்திரியின் ஆட்சி அரங்கேற்றப்பட்டு சில மாதங்களே ஆகின்ற போதிலும், அந்தக் காலத்துக்குள்ளேயே பலமான உள் உடைவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டது.

அந்த உள் உடைவுகள் ஏற்கனவே இருந்த ஒன்றுதான், பொது எதிரியாக மஹிந்த ராஜபக்ஷ இருந்தவரை அது அவ்வளவு வெளிக்காட்டப்படவில்லை அல்லது மக்களின் பார்வைக்கு வரவில்லை என்றும் கொள்ள முடியும். ஆனால், இப்போதுள்ள இடைவெளி அவற்றை இருக்கின்ற அளவைத் தாண்டியும் பெருப்பித்துக் காட்டச் செய்கின்றன.

இப்படியான நிலையில்தான், எதிர்வரும் பொதுத் தேர்தலை நோக்காகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கூட்டி, பங்காளிக் கட்சிகளுக்கிடையில் வேட்பாளர்களை பங்கிடுவது தொடர்பில் ஆராய்கின்றது. முக்கிய அரசியல்- இராஜதந்திர விடயங்களை கையாள்வதற்காக அவ்வளவாக கூட்டப்படாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அல்லது பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டங்கள் தேர்தல் என்றதும் எந்தவித கால தாமதமுமின்றி கூட்டப்படுகின்றன.

இன்னொரு பக்கம் எந்தவித தார்மிகமும் இன்றி, ஒருவர்மீது மற்றவர் சேறுபூசும் அரசியலை கூச்சமின்றி முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டனர். அதற்கான களங்களை தமிழ் ஊடகச் சூழலும் (குறிப்பாக இணைய ஊடகங்களும்) எந்தவித அடிப்படைகளும் இன்றி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. தமிழ்த் தேசிய அரசியலின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் தமிழ் ஊடகங்களின் பங்கு அளப்பரியது.

அதன்போக்கில், சேறு பூசும் அரசியலையும் அவை தமக்குள் உள்வாங்கி கையாள்கின்றன. அதன் பிரதிபலிப்புக்கள் இப்போதும் சொல்ல முடியாதளவுக்கு அதிகரித்திருக்கின்றது. இது, தமிழ்த் தேசிய அரசியலை வீழ்த்துவதற்கான சதிராடிகளுக்கு சாதகமான நிலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்ற கருத்து மோதல், ஊடகங்களினால் அதிகம் முன்னிறுத்தப்படுகின்றது. உட்கட்சி அரசியல் பிணக்குகள் என்கிற நிலையிலிருந்து அது, அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தப்படுவதற்கான காட்சிகளின் பிரதிபலிப்பையும் காட்டுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான அண்மைய சந்திப்பொன்றின்போது "வட மாகாண சபையை கருத்திற்கொள்ளாமல் கொழும்பு (மத்திய அரசாங்கம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து நேரடியாக பணம் வழங்குகின்றது. இது, கட்சியையும் வட மாகாண சபையையும் புறந்தள்ளும் நடவடிக்கையாக பார்க்கப்பட வேண்டியது" என்கிற தொனியிலான கருத்தை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

குறித்த விடயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே கூட வடக்கு மாகாண சபையை கருத்தில் கொள்வதில்லை என்கிற நிலைப்பாட்டை மக்களிடம் கொண்டு சேர்க்க பெருமளவு காரணமானது. முதலமைச்சரின் குறித்த கருத்து மாவை சேனாதிராஜாவை மறைமுகமாக குற்றஞ்சாட்டியிருந்ததாகவும் கொள்ளப்பட்டது. இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் என்கிற ரீதியில் மாவை சேனாதிராஜா, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கமளிக்க கோரியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த சி.வி.விக்னேஸவரன், மத்திய அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் வாங்கிய விவகாரம் தொடர்பில் குறைபாடுள்ள விளக்கத்தை அளித்தார். அத்தோடு, "தமிழ்த் தேசியத்துக்காக உழைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை உணர்வும் அர்ப்பணிப்பு தன்மையும் தேர்தல் காலங் களில் மட்டுமல்லாமல், என்றும் நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்று தொனிப்படும் உறுதிப்பாட்டையும் வெளியிட்டார். இதற்குப் பின்னரும்கூட குறித்த விடயம் ஊடகங்களில் தொடர்ந்தும் இருபக்க- மூன்றாவதுபக்க கருத்துக்களின் பரவலாக்கத்துடன் கையாளப்படுகின்றது.

இரா.சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வழிநடத்துவது யார்? என்கிற கேள்வி காலத்தினால் முக்கியத்துவம் பெறுகின்றது (ஒருவரின் வயதை வைத்து அவரின் இறுதிக் காலம் குறித்த கேள்வியை முன்வைப்பது அபத்தமானது. ஆனால், அந்தக் கேள்வி மக்களின் பெரும் அரசியலுக்கு அவசியமானது என்கிறபோது அதனைத் தவிர்ப்பது நல்லதல்ல).

சிரேஷ்ட அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்கான போட்டி நிலையில், மாவை சேனாதிராஜா முன்னிலையில் இருக்கின்றார். ஆனால், அவருக்கு பெரும் போட்டியாளராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருதப்படுகின்றார். வட மாகாண சபைத் தேர்தலில் மாவை சேனாதிராஜாவைத் தாண்டி சி.வி.விக்னேஸ்வரன் முன்னிறுத்தப்பட்டது கருத்தில் கொள்ள வேண்டியது.

அப்படிப்பட்ட அரசியல் நிலை இப்போது இல்லை என்கிற போதிலும், வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் மாவை சேனாதிராஜாவுக்கு ஆதரவாக இருந்த சில தரப்புக்கள், இப்போது சி.வி.விக்னேஸ்வரன் பக்கம் தாவியிருக்கின்றன. அதுபோல, தனிக்கட்சி அரசியல் என்கிற நிலைப்பாட்டில் தமிழரசுக் கட்சியினரால் தவிர்க்க முடியாமல் மாவை சேனாதிராஜா முன்னிறுத்தப்படுகின்றார்.

யதார்த்த அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகளின் போக்கில் இரா.சம்பந்தனுக்கு பின்னரான தலைமைத்துவத்துக்கு மாவை சேனாதிராஜாவோ, சி.வி.விக்னேஸ்வரனோ அவ்வளவு பொருத்தமான தலைவர்களாக இல்லை என்பது வெளிப் படை. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டில் மாவை சேனாதிராஜாவுக்கும் சி.வி.விக்னேஸ்வரனுக்குமான பார்வையில் அவ்வளவு வித்தியாசங்கள் இல்லை.

அதுபோல, நீடித்த அரசியலின் போக்கில் சக்கிரமாக பதற்றமான கருத்துக்களை வெளியிட்டு முரண்பாடுகளை அதிகரித்துக் கொள்ளும் தன்மை கொண்ட ஒரே நிலையிலேயே இருவரும் இருக்கின்றவர்கள் (தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைத்துவத்துக்கு இரா.சம்பந்தன் எவ்வளவு பொருத்தமானவர் என்கிற கேள்விக்கான தருணம் இன்னமும் முடிந்துவிடவில்லை என்பது வேறு விடயம்).

வயதை வைத்து, சிரேஷ்ட நிலையைக் கடந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மற்றவர்களிடம் கை மாறும் என்று எதிர்பார்க்க முடியாது. அடுத்த கட்டத்திலும் தலைமையேற்பதற்கு பொருத்தமான தலைவர்கள் வளர்தெடுக்கப்படவில்லை. அதை, தமிழ்த் தேசியச் சூழல் அனுமதித்து வந்திருக்கவில்லை.

அப்படிப்பட்ட நிலையில், மாவை சேனாதிராஜா மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு இடையில் இப்போது எழுந்துள்ள சர்ச்சைகள், தமிழ்த் தேசிய அரசியலை சிதறடிப்பதற்கான தரப்புக்களினாலும் கையாளப்படுகின்றதோ என்று அச்சம் கொள்ள வேண்டியிருக்கின்றது. அதைத் தாண்டி, முறையான அரசியல் திட்டங்களுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்ல வேண்டிய உண்மையையும் உணர்த்தி நிற்கின்றது. அதுதான், நீடித்த தமிழ் தேசிய அரசியலுக்கு அவசியமானது!

-தமிழ்மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 226

## பொறாமையிலிருந்து விடுதலை!

உங்களுடைய இருப்புத் தன்மையைப் பேணும் விடயங்கள் மட்டுமே இப்பொழுது முக்கியமாகத் தோன்றும், உங்களுடைய முழு மனோபாவமுமே மாறிவிடும். உங்களுடைய முழு இருப்பும் மாறிவிடும்.

உங்களுடைய இருப்பு, அவர்கள் அங்கீகரிக்காமல் போனால் கூட, தானாகவே மக்களைக் கவர்ந்திழுக்கும்! உங்களுடைய உள் மையத்திலிருந்து வீசும் ஒளியானது அவர்களது ஆழமான ஆர்வத்தைத் தூண்டியிழுக்கும். சமூகம் உங்களுடைய மாற்றமடைந்த மனோபவத்தைப் பற்றி விமர்சனம் செய்த போதிலும், அது உங்களுடைய இருப்பில் இருக்கும் தெளிவான வித்தியாசத்தை உணரத்தொடங்குகிறது.

உருமாற்றம் நிகழும் பொழுது கடந்த காலம் பற்றிய எதையும் வெறுமனே முற்றிலுமாக அலட்சியம் செய்து விடுங்கள். கடந்தகாலம் மீண்டும் மீண்டும் உங்களை பழக்கமான வடிமைப்புகளுக்குள்ளும் ஆழமான அடிமைத்தளைக்குள்ளும் இழுக்க முயற்சி செய்யும். நீங்கள் மற்றவர்களுடைய வார்த்தைகளை கேட்பீர்களானால் அடிமைத்தளைக்குள்ளேயே இருப்பீர்கள். வெறுமனே பரவச நிலையையும், உங்களுக்குள் உருமாற்றம் நிகழ்வதில் திடநம்பிக்கையையும் தீர்மானத்துடன் உறுதியாக பற்றி நில்லுங்கள் இதுவே உங்களுக்கான மிகப்பெரும் சோதனை - முழுமையாக உருமாற்றமடைவதை உங்களுடைய விடாமுயற்சிக்கான சோதனை. உருமாற்றமடைதல் முழுமைபெற்று பக்குவடையும் வரையில் உறுதியாக பற்றி நில்லுங்கள்.

ஒரு விடயத்தை புரிந்துகொள்ளுங்கள்... இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் நிரப்பும் பிரபஞ்ச சக்தியை உங்களை நிரப்பும் ஒரு சக்தியும் இருக்கிறது. ஆன்மீகம் என்பது இந்த பிரபஞ்ச சக்திக்கும் உங்களுடைய சக்திக்கும் ஒரு உயிருள்ள இணைப்பை ஏற்படுத்துவது தான். உங்களுடைய தனி விழிப்புணர்வு பிரபஞ்ச விழிப்புணர்வுடன் கலந்துவிடும் பொழுது நீங்கள் ஞானம் அடைகிறீர்கள்.



வெறும் ஞானமடையும் ஆசை மட்டுமே போதாது. அது விழிப்புடன் எடுத்த தீர்மானமாக இருக்க வேண்டும். பாருங்கள், சாதாரண ஆசைகள், உண்மையிலேயே உங்களை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி உந்தித் தள்ளாத, பேராசையைத் தவிர வேறல்ல. ஒரு விழிப்பான தீர்மானமென்பது, உங்களைச் சாதனையை நோக்கிச் செயற்பட வைக்கும். மக்கள் இந்த விடயங்களைப் பற்றியெல்லாம் சரியாக புரிந்துகொள்ளாமல், வெறுமனே மேலோட்டமான நிலையில் பேசுகிறார்கள். நீங்கள் புரிந்துகொள்ளாதபோது, தவறாக புரிந்துகொள்கிறீர்கள். ஆனால் புரிந்துகொண்டதாக எண்ணுகிறீர்கள்.

ஆன்மீகம் என்பது நமது உடல், மனம் மற்றும் ஆவியைப் பற்றிய ஒரு ஆழமான புரிந்து கொள்ளுதலைத் தரும் ஒரு விஞ்ஞானம். அதில் விழிப்புணர்வுடன் நுழையும் போது, வெளியுலகம் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்துவிடுகிறது.

மக்கள், வெளியிலிருந்து உங்களை பார்க்கும் பொழுது, நீங்கள் துறப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள். நீங்கள் எதையும் துறக்கவில்லை; வெளியுலக விடயங்கள் தான் தானாகவே வெறுமனே கரைந்துவிடுகிறது என்பதை, நீங்கள் மட்டுமே புரிந்து கொள்வீர்கள். மாயை மறந்து நீங்கள் மனோவசியத்திலிருந்து விடுவிக்கப்படுவீர்கள்.

ஒரு நிகழ்ச்சியில், எத்தனை பேர், நான் அவர்களை வசியப்படுத்தி வைத்திருப்பதாக நினைக்கிறார்கள் என்று கேட்டேன். எண்பது பேரில், மூன்று பேர் மட்டுமே கையை உயர்த்தினர். கைய உயர்த்திய ஒரு சிறு பெண்ணைக் கண்டு அவளருகில் இருந்த பெண்மணி சிரித்தார். அந்தப்பெண்மணியிடம் ஏன் சிரித்தீர்கள் என்று கேட்டேன்; குறைந்தபட்சம் அந்தச் சிறு பெண்ணிடம் கையை உயர்த்தும் நேர்மை இருந்தது.

அவர்களில் பலரும் கையை உயர்த்த விரும்பியிருப்பார்கள் என்று நிச்சயமாக சொல்ல முடியும்; ஆனால் நான் என்ன சொல்வேனோ என்று பயந்து பேசாமல் இருந்துவிட்டனர்! எப்படியோ மூன்று பேர் கையை உயர்த்தினர். நான் அவர்களிடம், நான் மனோவசியப்படுத்தவில்லை..

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

**18 வயதில் 144 வயதுடைய பெண்மணி போல் தோற்றமளிக்கும் இளம் பெண்.....**

பிலிப்பைன்ஸ் நாட்டின் **Ana Rochelle Pondare** எனும் பெண் பார்ப்பதற்கு 144 வயதுடையவர் போல் தோற்றமளித்தாலும் மிக அண்மையில் தான் அவரது 18 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.


இவர் தனது சிறு வயதிலேயே Progeria என்ற அரியவகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். மரபணு குறைபாடு காரணமாக இவரது வளர்ச்சி சாதாரணமானவர்களை விட 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



பொதுவாக இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14 வயதினிலேயே உயிரிழந்து விடுவர். Ana Rochelle Pondare தனது 18 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இதுவே அவரது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## கறிவேப்பிலைக் குழம்பு



**தே.பொருட்கள்:**

கறிவேப்பிலை - கால் படி
மிளகு - 1 ஸ்பூன்
சீரகம் - 1 ஸ்பூன்
சின்ன வெங்காயம் - 200 கிராம்
எண்ணெய் - 100 மி.லி
மா.பருப்பு - 1
மஞ்சள் பொடி - அரைசிட்டிகை
பெருங்காயம் - அரைசிட்டிகை
புளி, உப்பு, கடுகு - தேவையான அளவு

**செய்முறை**

கறிவேப்பிலையை நன்கு கழுவி சுத்தம் செய்து இலைகளை உளற விடவும். பின்னர் அதனுடன் மிளகு, சீரகம், மா.பருப்பு (மாங்கோட்டையின் உள்ளிருக்கும் பருப்பு) அனைத்தையும் சேர்த்து நைசாக அரைக்கவும்.

சின்ன வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும். புளியை கரைத்து கொள்ளவும்.

பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி காயவிடவும். கடுகு, பெருங்காயம் தாழித்து அதனுடன் அரிந்த வெங்காயத்தை போட்டு வதக்கவும். வெங்காயம் வதங்கி வரும் நேரத்தில் கரைத்த புளியை சேர்க்கவும். உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து கடைசியாக கறிவேப்பிலை விழுதை சேர்த்து எண்ணெய் சுண்டி சுருள வரும்வரை வதக்கவும்.

சுமார் 2 நாட்களுக்கு கெட்டு போகாமல் இருக்கும். இந்த குழம்பை மோர் சாதம் மட்டுமல்லாமல் இட்லி, தோசைகளுக்கு தொட்டு சாப்பிடலாம்.

மிகவும் சுவையாக இருக்கும், வயிற்று கடுப்பை போக்கும், அடிக்கடி சாப்பிட்டு வந்தால் தலை முடி கருமை நிறமாக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது எப்படி இருக்கு?

'தம்பி நீ என்னைத் திட்டப் போகிறாயா?'என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு தேவை ஏற்பட்டுள்ளது. இதன்படி, அமைச்சர் தனது அதிகாரியொருவரை அழைத்து ஜனாதிபதியைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு பணித்துள்ளார். குறித்த அதிகாரி ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு அழைப்பினை ஏற்படுத்தி தொலைபேசியை அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளார். ஜனாதிபதியுடன் 20 நிமிடங்கள் பேச வேண்டுமென எஸ்.பி. திஸாநாயக்க பாதுகாப்பு அதிகாரியிடம் கோரியியுள்ளார். பாதுகாப்பு அதிகாரி தொலைபேசியை ஜனாதிபதியிடம் ஒப்படைத்திருந்தார். "எனக்கு 12 நிமிடங்கள் போதாது, எனக்கு குறைந்தபட்சம் 20 நிமிடங்கள் தேவை" என எஸ்.பி. திஸாநாயக்க தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

"தம்பி நீ ஏன் 20 நிமிடங்கள் கேட்கிறாய், என்னைத் திட்டவா?" என தொலைபேசியின் மறுமுனையில் வந்த குரல் எஸ்.பி. திஸாநாயக்கவை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. தொலைபேசியின் மறுமுனையில் பேசியது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவாகும்.

ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தித் தருமாறு எஸ்.பி. பாதுகாப்பு அதிகாரிக்கு பணிப்புரை விடுத்த போது அதிகாரி, முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதனால் இந்த குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்களை எஸ்.பி. திஸாநாயக்க கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




### ஊழல் மோசடிகள் தொடர்பான

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்!

(கொழும்பு)

**மகிந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் நடவடிக்கைகள ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆணைக்குழுவின் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை நடத்த தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தாமையே இதற்கான காரணமாகும்.

துணை பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த விசாரணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. பணிகளை முன்னெடுப்பதற்காக 9 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணிக்கை எந்த வகையிலும் போதுமானதல்ல என ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் இதுவரையில் 800 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மேலும் 14 பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவை அவசியப்படுவதாக தெரிவித் துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாவிட்டால் விசாரணைகளை நடத்துவதில் சிக்கல் நிலைமை உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் வழங்க முடிவு

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு மீளவும் ரி56 ரக துப்பாக்கிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் காணப்படும் சிறைச்சாலைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரி56 ரக ஆயுதங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற பாரிய கலவரத்தைத் தொடர்ந்து ரி56 ரக ஆயுதங்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

கலவரத்தின் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ரி56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியிருந்தனர். தாக்குதலில் பெரும் எண்ணிக்கையி கைதிகள் கொல்லப்பட்டதுடன கைதிகள் காயமடைந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரி56 ரக துப்பாக்கிகள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டு ரிபிட்டர் ரக ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

எனினும் அவசர நிலைமைகளின் போது இந்த ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்த முடியாது என உத்தியோகத்தர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மீளவும் ரி56 ரக ஆயுதங்களை வழங்க அரசாங கம் தீர்மானித்துள்ளது. ரி56 ரக துப்பாக்கிகளை வழங்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தொடர்சசியாக அரசாங்கத்திடம் கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையுடன் உறவை மேம்படுத்த பிரான்ஸ் அரசு ஆர்வமாக உள்ளது



(கொழும்பு)

இலங்கையுடன்இருதரப்பு உறவை மேம்படுத்திக்கொள்ள பிரான்ஸ் அரசு ஆவலாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வர்த்தகம், முதலீடுகள், சுற்றுலா, மீன்பிடி, நீர்சுத்திகரிப்பு, சுற்றாடல், போதைவஸ்து தடுப்பு போன்ற விடயங்களில் இந்த ஆர்வம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரான்ஸின் தூதுவர் ஜீன் மாரின் சொச் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது இதனை தெரிவித்துள்ளார்.

இதனொரு கட்டமாக பிரான்ஸின் ஆசியாவுக்கான தலைமையகம் இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பிரான்ஸ் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இந்த வருடத்தில் ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கதிர்வேல் ராஜாதித்தன்

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்வேல் ராஜாதித்தன் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.3.30 மணிவரை Elgin Mills Cemetery & Crematorium, 1591 Elgin Mills Rd E, Richmond Hill, ON L4S 1M9, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சபாரத்தினம் நாகதீபசோதிரூபன்

(கிராம சேவையாளர், கரணவாய் வடக்கு J/360)

அல்வாய் மேற்கு திக்கம் அருந்ததியாய் வளவைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு வதிரிச் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட சபாரத்தினம் நாகதீபசோதிரூபன் நேற்று முன்தினம் அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் பி.ப.1மணியளவில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி தம்பிஐயா இராஜேஸ்வரி

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பி ஐயா இராஜேஸ்வரி நேற்று முன்தினம் புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ... வேம்பிராய் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.




### திருமதி ஜோசப் மேரி ஜோசப்பின் தங்கராணி

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் மேரி ஜோசப்பின் தங்கராணி நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் இல்லத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை யா/புனித மரியன்னை பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட கயிறிழுத்தல் யாழ்.மாவட்டம் 2-ம் இடம்



பெண்களுக்கான தேசிய மட்ட கயிறிழுத்தலில் வரலாற்றில் முதன் முறையாக 2-ம் இடம்பெற்று சாதனை படைத்தது யாழ்.மாவட்டம்.

26-வது தேசிய மட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் மாவட்டமட்ட அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பெண்கள் அணிகளுக்கிடையிலான கயிறிழுத்தல் போட்டிகள் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது.

இப் போட்டியில் காலிறுதியில் கொழும்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்கொண்ட யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணி வெற்றிபெற்று அரையிறுதியில் புத்தளம் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணிய்யை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் குருநாகல் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணியோடு கடுமையாகப் போராடிய போதும் அது பலனளிக்காமையால் 2-ம் இடத்தை யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணி பெற்றுக் கொண்டது.

இதன் மூலம் தேசிய இளைஞர் கழக சம்மேளன விளையாட்டு நிகழ்வின் பெண்களுக்கான தேசிய மட்ட கயிறிழுத்தலில் வரலாற்றில் முதன் முறையாக 2-ம் இடம் பெற்று சாதனை படைத்தது யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணி. (க-23)

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கரம் சுற்றுப்போட்டி

2015 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கரம் சுற்றுப் போட்டி முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குப்படுத்தப்பட்டு ஜூன் மாதம் 27,28 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) மகரகமவிலுள்ள இலங்கை கரம் சம்மேளனத்தில் நடத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் 14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளரும், இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தின் தலைவரும், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசனை சபையின் தலைவருமாகிய வைத்திய கலாநிதி செ.கண்ணதாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

# வடமாகாண டென்னிஸ் சென்ஜோன்ஸ் சம்பியன்

வட மாகாண டென்னிஸ் தொடரில் மாகாண சம்பியனாகியது சென் ஜோன்ஸ் கல்லூரி அணி.

வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான டென்னிஸ் தொடர் கடந்த செவ்வாய்க்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி டென்னிஸ் திடலில் இடம்பெற்றது.

இதில் ஆண்களுக்கான இரு ஒற்றையர் ஆட்டத்தை கைப்பற்றி வெற்றிபெற்றது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பில் சஞ்ஜீவனும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் சரோண்னும் மோதிக் கொண்டனா.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சஞ்ஜீவன் 6:3, 6:1 என்ற செற் கணக்கில் சென்.ஜோன்ஸின் முதல் வெற்றியை பதிவு செய்தார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் டிலந்தனும் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பாக கிருசாந்தனும் மோதிக் கொண்டனர்.

இதில் 6:1, 6:1 என்ற செற் கணக்கில் டிலாந்தன் வெற்றிபெற வட மாகாண சம்பியனாகியது சென் ஜோன்ஸ் கல்லூரி. (க)



ஐக்கிய இராச்சியத்தில் (U.K) தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 23-வது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை ஓய்வு நிலை பேராசிரியர் மா.நடராஜாசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

## யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் 19 வயதின் கீழ் ஹொக்கி அணியினர்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி போட்டி அமைப்பில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 19 வயதுப் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியனாகியது. யாழ்ப்பாணக் கல்லூரி இப் போட்டியில் 2-ம் இடத்தினை பெற்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரை படத்தில் காணலாம்.

# மன்னாரில் முதற் தடவையாக ஒலிம்பிக் தின நிகழ்வுகள்

மன்னாரில் முதற் தடவையாக ஒலிம்பிக் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நானகு மணியளவில் மன்னர் தீவினையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் பிரதான பாலத்தில் இருந்து வைபவரீதியாக ஆரம்பமாகியது.





மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பாடசாலைகளின் மாணவ, மாணவகள் ஒலிம்பிக் தீபத்தையும் அதனை தொடந்து ஒலிம்பிக் சின்னம் மற்றும் கொடியை ஏந்தியவாறு நடைபவனியாக சென்றனர்.

மன்னார் பிரதான பாலத்திலிருந்து ஆரம்பமாகிய ஒலிம்பிக் நடைபவனி மன்னாரின் பிரதான சுற்றுவட்டத்தின் ஊடாக செபஸதியார் வீதியை அடைந்து அங்கிருந்து வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை அடைந்தது. அங்கு வைபவரீதியாக ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டதுடன் தேசிய கொடி மற்றும் ஒலிம்பிக் கொடி உட்பட ஏனைய கொடிகளை அதிதிகள் வைபவரீதியாக ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, விளையாட்டு விவகார அமைச்சின் பணிப்பாளர் ருவான் சந்திர, ஒலிம்பிக் சங்கத்தின் உப தலைவர் தேவகென்றிக், தேசிய ஒலிம்பிக் சங்க செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா மற்றும் அரசியல் பிரமுகர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இராணுவத்தின் இசை நிகழ்சி, நடனாங்கள் நடைபெற்றதுடன் அதிதிகள் உரை இடம் பெற்றது. அதனை தொடர்ந்து சித்திர போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (க)






யாழ்.வலயமட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் குண்டுபோடுதல் நிகழ்ச்சியில் 1-ம் இடத்தினையும், தட்டெறிதல் நிகழ்ச்சியில் 2-ம் இடத்தினையும் பெற்றுக்கொண்ட யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை மாணவன் ச.ராகுலன், பயிற்றுவிப்பாளர் ம.வாகீசன், அதிபர் ப.சுதர்சன், பிரதி அதிபர் திருமதி.த.தேவபாதம் ஆகியோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த இல்லையென்றால் மாற்றுவழியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்காவிட்டால் மாற்றுவழியொன்றில் செல்ல நேரிடும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மக்கள் கேட்கும் நபருடன் சேர்ந்து மீண்டும் ஆட்சியமைப்பதா? அல்லது ஐ.தே.கவுக்கு ஆட்சியை தாரைவார்ப்பதா?என முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.ம.சு.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அவர்கள் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு பயந்து பாராளுமன்றத்தை கலைப்பது வெட்கக் கேடான விடயம் என்றும் தெரிவித்தனர்.

ஐ.ம.சு.மு. பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, திலும் அமுனுகம, ஜான வக்கும்புர, அருந்திக பெர்ணாந்து, ரஞ்சித் சொய்சா ஆகியோர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

**டலஸ் எம்.பி.**

ரவிகருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 6 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஒழுங்குப் புத்தகத்தில் உள்ள நிலையில் அவற்றை நிறுத்த ஐ.தே.க.முயல்கிறது.எம்பிகளின் கையொப்பங்களை வாபஸ் பெற வைக்க முயற்சி நடக்கிறது. பாராளுமன்றத்தை கலைககுமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் வழங்கப்படுகிறது.

மத்திய வங்கி மோசடி குறித்த இடைக்கால அறிக்கை பாராளுமன்றததில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு முன் பாராளுமன்றத்தை கலைக்க அரசு முயல்கிறது

20 ஆவது திருத்தத்திற்கு உதவ நாம் தயார். 19 ஆவது திருத்தம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்த போது சந்திரிகா குமாரதுங்கவினால் பாராளுமன்றத்தை கலைக்க முடிந்திருக்காது.

4 1/2 வருடம் காத்திருக்க நேர்ந்திருக்கும். அப்பொழுது நாட்டில் தனி ஈழம் உருவாகியிருக்கும். அதனாலே நாட்டின் மீது அன்பு செலுத்தும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க கோருகிறோம் எனத் தெரிவித்தார்.


**அருந்திக பெர்ணாந்து எம்.பி.**

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றும் உண்மையான நோக்கம் ஜனாதிபதிக்கு இருந்தால் 140 எம்.பிகள் உள்ள ஐ.சு.மு.வுக்கு ஆட்சியை வழங்க வேண்டும். நம்பிக்கையில்லா பிரேரணைக்காக ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தால் அது ஐ.தே.க.வை பாதுகாக்க எடுத்த நடவடிக்கை என்றே கூற நேரிடும். அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு அவகாசம் வழங்கா விட்டால் மாற்று வழியை தேட நேரிடும்.

**ரஞ்சித் சொய்சா எம்.பி.**

எமது கையொப்பங்களை வாபஸ் பெற அரசு முயல்கிறது. நாம்அதற்கு தயாரில்லை. எத்தகைய சவால் வந்தாலும் அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழ் போட்டியிட முடிவு செய்துள்ளோம். மகிந்த ராஜபக்ஷ இன்றி போட்டியிட்டால் 20 இலட்சம் வாக்குகள் கூட கிடைக்காது. சு.கவில் இருந்து விலகாது தேர்தலில் குதிப் போம் என்றார்.

**திலும் அமுனுகம எம்.பி.**



மகிந்த ராஜபக்ஷவையும் இணைத்து போட்டியிடுவதன் மூலமே அடுத்த தேர்தலில் வெல்ல முடியும். சுதந்திரக் கட்சியினுள் நாட்டை பாதுகாக்கக் கூடிய, முன்னேற்றக் கூடிய வேறு எந்த தலைவரும் இல்லாததாலே மக்கள் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க கோருகின்றனர் என்றார்.

**ஜானக வக்கும்புர எம்.பி.**

19 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு 20 ஆவது திருத்தத்தை தான் நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால் பாராளுமன்றத்தை கலைக்க முயற்சி நடக்கிறது. மக்கள் விரும்பும் நபரை தேர்தலில் நிறுத்தாமல் தோற்றுப் போகும் ஐ.தே.க.வுக்கு ஆட்சியை வழங்குவதா மகிந்த ராஜபக்ஷவை நிறுத்தி வெல்வதா என முடிவு செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ)

## சுனாமி விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் பிரதேச செயலக பிரிவில் உள்ள மருதபுரம் J/40,கிராம உத்தியோகத்தர் பிரிவை மட்டும் உள்ளடக்கி இன்று 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப்பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப் படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது என யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் எஸ்.ஆர். கனகநாயகம் சிறுவர் பூங்கா திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3மணிக்கு சங்கத்தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி க.கனகஈஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# செல்ஃபி



க.அபினாஸ், உபயகதிர்காமம்.



வித்தியாதரன்



மயூரன், திருநெல்வேலி.



தீபன் பருத்தித்துறை



கிருஷாந், நல்லூர்.



யசோதரன், அளவெட்டி.

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக் கலையே நாகரிகம். முரண்பட்ட பேச்சுக் கூட தொடர்பை வளர்க்கிறது. மௌனம் மக்களை ஒதுக்கிவைக்கிறது. - தாமஸ் பெய்ன்

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

# பேசுவதன் மூலமே தெளிவுபட முடியும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை மன ஆறுதலைத் தருகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது பேச்சுவார்த்தை மூலமே சாத்தியமாகும் என்பதால் தொடர்ந்து பேசுவது அவசியம்.

அந்தவகையில் ஜனாதிபதி மைத்திரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்தித்து தொடர்ந்தும் பேசுவதெனத் தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அந்த இலக்கை அடைவதாக இருந்தால் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் பேசியாக வேண்டும்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இனப்பிரச்சினை குறித்துப் பேசுவது ஒரு நல்ல முடிவை எட்டுவதற்கு உதவும் என நம்பலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கானதீர்வென்பது தொடர்பில் ஏகப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

அதில் இரு தரப்பும் ஆயுத பலத்துடன் பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு.

எனினும் நடந்த பேச்சுவார்த்தைகளில், உண்மைத் தன்மை இல்லாமல் போனதன் காரணமாக பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இது தவிர, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகளில் உச்ச அதிகாரம் உள்ள தலைவர்கள் கலந்து கொள்ளாமல் அவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமையும் பேச்சுகள் இடையில் முறிந்து போவதற்கு வாய்ப்பாகியது.

இதற்கு மேலாக, பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது இரு தரப்பைச் சார்ந்தவர்கள் தேவையற்ற அறிக்கைகளை வெளியிட்டதும் பேச்சுவார்த்தைகள் தோல்வியுறக் காரணமாயிற்று.

இவை காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேசுதல் என்ற விடயம் அப்படியே அமிழ்ந்து போயிற்று.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தெரிவுக்குழு என்ற காட்டாப்பை முன்வைத்த போது, தெரிவுக்குழுவில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட, பேச்சுவார்த்தை என்ற விடயம் பேசாப் பொருளாகியது.

இந்தநிலையில் 2015 ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குப் பலமும் சேர்ந்து மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி மைத்திரி இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த விரும்புகிறார். இதற்காக அவர் நல்ல சமிக்ஞைகளை விடுத்துள்ளார்.

எனினும் அவரின் நன்முயற்சிகளுக்கு தென் பகுதி அரசியல்வாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பர் என்பது தெரிந்த விடயமாகினும் ஜனாதிபதி மைத்திரியின் கரத்தைப் பலப்படுத்தி அவருடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வியூகம் அமைக்க வேண்டும்.

அரசும், தமிழ்த் தரப்பும் மாறிமாறி குற்றம் சாட்டுவதைத் தவிர்த்து இருதரப்பும் பேசி அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது; தொடர்ந்து தமிழர் உரிமை விடயத்தில் தீர்வு காண்பது என்றவாறாகப் பேச்சுவார்த்தைகள் நகர்த்தப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை இடம்பெற்றால் மட்டுமே எங்கெங்கு தீர்வுக்குத் தடைகள் இருப்பதென்பது தெரியவரும் என்பதுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்ற விடயம் நினைவுக்குரியதாக இருக்கும்.

ஆகையால் ஜனாதிபதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அடிக்கடி சந்தித்து பேசுவது நல்லதொரு சூழலைத் தோற்றுவிக்க உதவும் எனலாம்.

# இளைஞர்களிடையே மோதல் 6 பேர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

இரு விளையாட்டுக் கழக இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 6 பேர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் அல்வாய்ப் பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த இரு கழகங்களுக்கும் இடையில் மைதானப் பாவனை தொடர்பாக நீண்ட காலமாக கருத்து முரண்பாடு இருந்துள்ளதுடன் கைது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றமும் கவனம் செலுத்தி வந்துள்ளது.

இந்நிலையில் பருத்தித்துறை நீதவான் கடந்த 9-ம் திகதி சமாதானமான முறையில் மைதானத்தை சிரமதானம் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சிரமதானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இரு கழக இளைஞர்களுக்கு மிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மோதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இதில் ம.கவிசன் (வயது 21), செ.சுஜித்(வயது 24), த.குணசீலன் (வயது 35), ப.சுரேஸ்குமார் (வயது 49), பா.ரவிச்சந்திரன் (வயது 50), சி.சிவபாதம்(வயது 53) ஆகியோர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் பதற்றம் நிலவியது.

இதனையடுத்து அங்கு பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (எ-3,60)

# கண்ணகை அம்மன் ஊர்வலம் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் கண்ணகை அம்மன் கிராம ஊர்வலம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பகல் 10 மணியளவில் விஷேட அபிஷேகம் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு கண்ணகை அம்மனின் கிராம ஊர்வலம் இடம்பெறும்.(ந)

# தாக்கியவர் கைது

(கரணவாய்)

கிராம சேவையாளரைத் தாக்கிய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 24-ம் திகதி கிராம சேவையாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் நேற்று மாலை 5.30 மணிக்கு அவரது வீட்டில்வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ-60)

# துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் அணிக்கும் ஹாட்லியைற்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறும் சிநேகபூர்வமான துடுப்பாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி வர்ண ஆடை,வெள்ளை பந்து கொண்ட இருபதுக்கு இருபது போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஆய்வுகூட திறப்பு விழா

(கிளிநொச்சி)

பளை மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வட மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ-1)

# வித்தியா கீதங்கள் இறுவெட்டு வெளியீடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் நினைவுகளைத் தாங்கி கிளியூர் ரமணன், சிவா ரதீஸ் ஆகியோரின் இயக்கத்தில் புங்குடுதீவு இளைஞர் கழகத்தினால் வெளியிடப்படும் வித்தியாவின் கீதங்கள் பாடல் இறுவெட்டு வெளியீடு இன்று காலை 11 மணிக்கு யாழ்.புங்குடுதீவு மகா வித்தியாலய வளாகத்தில் இடம்பெறுகின்றது.

மாணவி வித்தியாவின் 45-ம் நாள் நினைவு நிகழ்வுகள் நடைபெறும்போது அவ் இறுவெட்டு வெளியீடு இடம்பெறவுள்ளது.

இவ் இறுவெட்டில் வித்தியாவின் வரலாறுகள் பாடலாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-1)




## நற்செயல்களைச் செய்யுங்கள

★ பிரார்த்தனையைத் தவிர வேறு எந்த செயலாலும் விதியை மாற்றிக் கொள்ள முடியாது. நற்செயல்களைத் தவிர எந்தச் செயலாலும் ஆயுளை நீடிக்கச் செய்ய முடியாது.

★ எவர் ஒருவர் துன்பத்திற்கு ஆளானவரை நெருங்கி ஆறுதல் மனமிரங்கி கூறுகிறாரோ,அவருக்கு துன்பத்திற்கு ஆளானவருடைய நன்மைக்குச் சமமான நன்மை கிடைக்கும்.


★ வெட்கம் நன்மைகளை இழுத்து வரும்.உனக்கு வெட்கம் இல்லையாயின்உனது இஷ்டம்போல்நடந்துகொள்.

★ இறைவனிடத்தில் சிறந்தவர் யார் என்றால், தன்னுடைய நண்பர்களிடம் நல்லவராக நடப்பவரே!

★ உங்களுக்குள் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அன்பளிப்புகளைக் கொடுப்பது மனதிலுள்ள பொறாமைகளை அழித்து விடுகின்றது.

★ கெட்டவர்களுடன் தோழமை கொள்ளாதே. ஏனென்றால் அவர்களுடன் தோழமை கொண்டால் அவர்களின் கணக்கில் உன்னையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து



## பழக்கவழக்கங்களும் புலனடக்க விரதம்

பூர்வ வாசனைகளை (நினைவுப் பதிவுகளை) ஒழிப்பது எப்படி? சில பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட விரும்பும் எல்லோரும் கேட்கும் கேள்விதான் இது.

நீங்கள் சில பழக்கவழக்கங்களிலிருந்து வெளிவர விரும்புவதற்குக் காரணம் அவை உங்களுக்கு வேதனையைத் தருகின்றன. உங்களைக் கட்டுப்படுத்துகின்றன. உங்களைத் தொல்லைப்படுத்துவது அல்லது பந்தத்தில் பிணைப்பது வாசனையின் இயல்பு. சுதந்திரமாக இருக்க விரும்புவது வாழ்க்கையின் இயல்பு. ஆன்மா சுதந்திரமாய் இருப்பது எப்படி என்பதை அறியாத நிலையில், அது சுதந்திரத்திற்காக ஏங்கிப் பிறவிகள்தோறும் அலைகிறது.

பழக்கவழக்கங்களை விட்டு வெளிவருவதற்கு புலனடக்க விரதம்தான்வழி.

வில்லை. இத்தகையவர்கள் ஒருவிரதம் எடுத்துக்கொள்ளலாம். அதாவது 5 நாட்கள் என்று ஒரு காலவரையறைக்குட்பட்ட விரதம். ஒருவருக்குச் சபிக்கும் சூளுரைக்கும் பழக்கம் இருந்தால் 10 நாட்களுக்குத் தீய சொற்களைப் பயன்படுத்துவதில்லை என அவர் விரதம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆயுள் முழுவதும் என்று எடுக்கவேண்டாம்.

இதுதான் 'ஸம்யமா' (புலனடக்கம்) ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் ஸம்யமா அருளப்பட்டிருக்கிறது.

பழைய மாதிரியே மனம் பழக்கவழக்கங்களில் வீழ்ந்தால் இரண்டு காரியங்கள் நிகழலாம். ஒன்று நீங்கள் மனம்

உணர்வீர்கள். இரண்டு ஸம்யமாவுக்கு ஒரு வாய்ப்பு என்று எண்ணி மகிழ்வீர்கள்.

செய்யும். ஸம்யமா இல்லையேல் வாழ்க்கை நோயின்றி மகிழ்ச்சியாக இருக்காது. உதாரணமாக மூன்று முறை

ஸம்யமாவின் வாயிலாக எந்தப் பழக்கவழக்கத்திலிருந்தும் விடுபட்டு உயரமுடியும்.

உங்களுக்குத் தொல்லையாக உள்ள பழக்கங்களை எல்லாம் ஸம்யமாவில் விரதத்தினால் கட்டுப்படுத்துங்கள்.

காப்பாற்ற முடியவில்லை என்றால் அதையும் குறித்துக்கொள்ளுங்கள். விரதத்தை மீறிய நேரத்தையும் நாளையும்

[illegible] பழக்கங்களை [illegible] பிணைத்துக் கட்டிப்போடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் வெயில் கொடுமை

# பலி எண்ணிக்கை 1200 ஐ தாண்டியது

## சிந்து மாகாணத்திற்கு பொது விடுமுறை அறிவிப்பு

(கராச்சி)

**பாகிஸ்தானில் தொடர்ந்து வீசிவரும் அனல் காற்றினால் பலியானோர் எண்ணிக்கை 1200 ஆக அதிகரித்துள்ளது. இந் நிலையில் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திற்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர்.**

பாகிஸ்தானில் சிந்து மாகாணமும், அதன் தலைநகரான கராச்சியும் தொடர்ந்து சுட்டெரிக்கும் வெயிலின் பிடியில் சிக்கி தவித்து வருகின்றன.


ஒரு கோடியே 80 இலட்சம் பேரை மக்கள் தொகையாக கொண்ட கராச்சியில், வெயிலுக்கு தினந்தோறும் மக்கள் பலியாகி வருகின்றனர்.


சிந்து மாகாணத்தில் அம்புலன்ஸ் சேவை வழங்கும் முன்னணி நிறுவனமான எதி பவுண்டேஷனின் அன்வர் காஸ்மி, தெரிவிக்கையில், கராச்சியில் வெயிலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டி விட்டது எனக்கூறியுள்ளார்.

சிந்து மாகாண முதல் அமைச்சர் காயிம் அலி ஷா கூறுகையில், சிந்து மாகாணத்தில் தொடர்ந்து அனல் காற்று வீசுகிறது. கராச்சி தவிர்த்து மாகாணத்தின் பிற பகுதிகளில் 200-க்கும் மேற்பட்டவர்கள் வெயிலுக்கு பலியாகி இருக்கிறார்கள் என்றார்.

சிந்து மாகாணத்தில் வெயிலின் உக்கிரத்தால், நேற்று முன்தினம் பொது விடுமுறை விடப்பட்டிருந்தது. இதனால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். (இ-3)

## இந்தியா முழுவதும் 100 ஸ்மார்ட் நகரங்கள் ஆரம்பித்துவைத்தார் பிரதமர் நரேந்திர மோடி





இந்தியா முழுவதும் 100 ஸ்மார்ட் நகரங்கள் அமைக்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார்.

100 ஸ்மார்ட் நகரங்கள் அமைக்கப்படும் என்று கடந்த பெப்ர வரியில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல அடல் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 500 நகரங்கள் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் அவாஸ் யோஜ்னா திட்டத்தில் அனைவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்தப்படும் என்றும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி சர்வதேச தரத்துக்கு இணையாக ரூபாய் 48 ஆயிரம் கோடி செலவில் 100 ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கவும் ரூ.50 ஆயிரம் கோடியில் 500 நகரங்களை அனைத்து வசதிகளுடன் புதுப்பிக்கவும் மத்திய அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியது.

இவை தவிர அனைவருக்கும் வீட்டுமத் திட்டத்தில் எதிர்வரும் 2022-ம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் 2 கோடி புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மூன்று திட்டங்களையும் பிரதமர் மோடி டில்லியில் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த 3 திட்டங்களையும் நிறைவேற்றுவதில் மாநில அரசுகளும், உள்ளாட்சி அமைப்புகளும் பெரும் பங்கு வகிக்கவுள்ளன. இத் திட்டங்களில் தனியாரின் பங்களிப்பும் இடம்பெறும்.

ஒட்டுமொத்தமாக அமைக்கப்பட்டவுள்ள 100 ஸ்மார்ட் நகரங்களில் அதிகபட்சமாக உத்தரப்பிரதேசத்தில் 13 ஸ்மார்ட் நகரங்கள் அமைக்கப்பட உள்ளன.

உத்தரப் பிரதேசத்தை அடுத்து தமிழகத்தில் 12 ஸ்மார்ட் நகரங்கள் உருவாக்கப்பட உள்ளன. மேலும் அடல் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 33 நகரங்கள் மேம்படுத்தப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)


## தாக்குதலுக்கு பதிலடி 37 தீவிரவாதிகள் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டின் பாராளுமன்றத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இந்த தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில், 5 மாகாணங்களில் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதல்களில் 37 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 41 தீவிரவாதிகள் படுகாயம் அடைந்தனர்.

அவர்களிடம் இருந்து 155 சக்தி



வாய்ந்த வெடிகுண்டுகள், ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இருப்பினும் இந்த தாக்குதல், நாட்டின்பாதுகாப்புக்கு விடப்பட்ட சவால் என ஆப்கானிஸ்தான் கருதுகிறது.

இதன் காரணமாக தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தான் தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த தகவல்கள், ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# புதிய நாணயங்களை வெளியிட்டது ஐ.எஸ்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத் இயக்கம் புதிய நாணயங்களின் புகைப்படங்களை வெளியிட்டு உள்ளது, ஈராக் மற்றும் சிரியாவில் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

ஈராக், சிரியா நாடுகளின் பல பகுதிகளை கைப்பற்றி இஸ்லாமிய தேசமாக அறிவித்து, அதன் தலைவராக தன்னை அறிவித்துக் கொண்டவர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத் தலைவரான அபுபக்கர் அல் பக்தாதி. கடந்த ஜூலை மாதம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட வீடியோவில், அனைத்து முஸ்லிம்களும் தனது தலைமையை ஏற்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். சுமார் 40 வயதாகும் பக்தாதி 2010-ம் ஆண்டு ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் தொடங்கப்பட்டவுடன், அல்கொய்தாவின் உளளூர் கிளையை தனது தனி தீவிரவாத இயக்கமாக மாற்றிக் கொண்டார். அல் பக்தாதி தலைக்கு அமெரிக்க அரசு ரூபாய் 60 கோடி விலை அறிவித்துள்ளது.

அல் பக்தாதி கொல்லப்பட்டான் என்றும், இல்லையென்றும் மாறுபட்ட தகவல்கள் வெளியாகிவருகின்றன.

இஸ்லாமிய தேசமாக உருவாக்க முயற்சி செய்யும் தீவிரவாத இயக்கம் உலக நாடுகளுக்கு சவால் விடுக்கும் வகையில் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகிறது.

தீவிரவாதிகளுக்கு எண்ணெய் விற்பனை, பிணைக் கைதிகள், வரி மற்றும் திருடப்பட்ட கலைப் பொருட்கள் விற்பனை மூலம் நிதிகிடைக்கிறது என்று அமெரிக்க முன்னாள் கருவூல செயலாளர் ஜிம்மி கர்லே கூறியுள்ளாரர.

சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் முக்கிய நகரங்களை பிடித்து வைத்திருக்கின்றனர். அத்துடன் பல எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளையும் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளனர்.

கடத்தல் கச்சா எண்ணெய் விற்பனை மூலம்தான் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் இப்போது ஈராக்கிலும், சிரியாவிலும் அமெரிக்க தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் புதிய நாணயம் வெளியிடப்படும் என்ற அறிக்கையை ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் கடந்த நவம்பர் மாதம் வெளியிட்டது.

அப்போது புதிய நாணயத்தின் மாற்று விகிதம் மற்றும் எங்கு நாணயம் கிடைக்கும் என்பது தொடர்பாக விளக்கம் அளிக்க மற்றொரு அறிக்கை வெளியிடப்படும், இரண்டு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் இரண்டு செம்பு நாணயம் என ஏழு நாணயங்களை வெளியிட உள்ளதாக அறிவித்தது.

இந்நடவடிக்கை கடவுளுக்கு முற்றிலும் அர்ப்பணித்து, சாத்தான்களின் வட்டியை அடிப்படையாக கொண்ட உலகப் பொருளாதார அமைப்பில் இருந்து முஸ்லிம்களை நீக்கும், என்று ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் தங்கம், வெள்ளி, மற்றும் தாமிரத்தில் சொந்த நாணயத்தை உருவாக்கி உள்ளது.


இது தொடர்பான புகைப்படங்கள் டுவிட்டரில் வெளியாகி உள்ளது. புகைப்படங்கள் அனைத்தும் உறுதிசெய்யப்படவில்லை, இருப்பினும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத ஜிகாதிகளால் இதுவெளியிடப்பட்டு உள்ளது என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

நாணயம் இரண்டு விதமாக உள்ளது. ஒன்றில் உலக வரைபடமும், மற்றொன்றில் கோதுமை விளைச்சல் செய்யப்படும் புகைப்படமும் இடம்பெற்று உள்ளது.

நாணயம் சிரியா மற்றும் ஈராக்கில் பயன்பாட்டுக்கு வர உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிந்து குஷால், தம்மிக்க பிரசாத் மிரட்டல் பந்துவீச்சு
# 138 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான் அணி



இலங்கைக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 138 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இலங்கை சுற்றுப்பயணம் செய்துள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் மோதும் 2வது டெஸ்ட் போட்டி கொழும்புவில் நேற்றுத் தொடங்கியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

அதன் படி பாகிஸ்தான் அணி, தனது முதல் இன்னிங்சை விளையாடியது.

ஆரம்பத்திலே பிரசாத்தின் பந்துவீச்சில், அகமது சிஹசாட் (1), அசார் அலி (26), யூனிஸ் கான் (6) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

நிதானமாக விளையாடி வந்த ஹபீசை (42) அரைசதம் எடுக்க விடாமல் குஷால் பவுல்ட் செய்தார்.

இதன் பின்னர் மிஸ்பா (7), ஷாபிக் (2), சர்பிராஸ் (14), வஹாப் ரியாஸ் (4), யாசிர் ஷா (15), சுல்பிகர்(5), ஜூனிட் கான் (2) வரிசையாக சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் 138 ஓட்டங்களிலே அனைத்து விக்கெட்டுகளையும் பாகிஸ்தான் அணி இழந்தது.

பந்துவீச்சில் மிரட்டிய தரிந்து குஷால் 5 விக்கெட்டுகளையும், பிரசாத் 3 விக்கெட்டுகளையும்,



சமீரா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை விளையாடி வரும் இலங்கை அணி நேற்றைய முதல்நாள் முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## இந்தியா ஆறுதல் வெற்றி தொடர் வங்கதேசம் வசம்

வங்கதேசத்துக்கு எதிரான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய கிரிக்கெட் அணி அந்நாட்டு அணிக்கெதிராக 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது. இதில் முதல் 2 போட்டிகளில் இந்தியா தோல்வியடைந்த நிலையில், நேற்றுமுன்தினம் மூன்றாவது மற்றும் கடைசி போட்டி மிர்புரில் நடைபெற்றது.



தொடரை இழந்த இந்திய அணி, ஆறுதல் வெற்றி பெறுமா? என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் டாஸை வென்ற வங்கதேசம், இந்திய அணியை துடுப்பாட்டம் செய்யும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி முதலில் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க வீரர்கள் நிதானமாக விளையாடி நம்பிக்கை அளித்தனர். ரோகித் சர்மா 29 ஓட்டங்களில் வெளியேறிய போதும், மற்றொரு தொடக்க வீரர் ஷிகர் தவான் நிலைத்து நின்று விளையாடியதால் ஓட்டஎண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

இதற்கிடையே அணியின் ஓட்ட எண்ணிக்கை 114 ஆக இருந்தபோது அதிரடி வீரர் விராட் கோலி, 25 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அரை சதம் கடந்து முன்னேறிய தவான் 75 ஓட்டங்கள் எடுத்த நிலையில் விக்கெட்டை இழந்தார். அம்பதி ராயுடு தன் பங்கிற்கு 44ஓட்டங்கள் சேர்த்தார்.

முந்தைய போட்டிகளைக் காட்டிலும் விறுவிறுப்பாக ஆடிய கப்டன் தோனி, 77 பந்துகளில் 6 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 69 ஓட்டங்கள் விளாசினார். 6-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய ரெய்னா 38 ஓட்டங்களில் ஆட்டமிழக்க 50 ஓவர் முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 317 ஓட்டங்கள் எடுத்தது. வங்கதேசம் தரப்பில் மோர்தசா 3 விக்கெட்டுகளும் முஸ்தாபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

இதையடுத்து 318 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வங்கதேச துடுப்பாட்ட வீரர்களை இந்திய பந்துவீச்சாளர்கள் திணறடித்தனர். தொடக்க வீரர்களான தமிம் இக்பால் 5 ஓட்டங்களில் குல்கர்னியிடம் விக்கெட்டை இழந்தார். அதன்பின்னர் ஆக்ரோஷமாக விளையாடிக்கொண்டிருந்த சவுமியா சர்க்கார் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவரது விக்கெட்டையும் குல்கர்னி கைப்பற்றினார்.

இதேபோல் ரெய்னா, அஷ்வின் ஆகியோரும் வங்கதேச துடுப்பாட்ட வீரர்களின் ஓட்ட வேகத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தியதுடன் விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். முஷ்பிகுர் ரகிம் (24), லித்தன் தாஸ் (34), சாகிப் அலி ஹசன் (20), சபிர் ரஹ்மான் (43), நசிர் உசைன் (32) ஆகியோர் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுக்க, பின்கள வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் 18 பந்துகள் மீதமிருந்த நிலையில் வங்கதேச அணி 240 ஓட்டங்களில் சுருண்டது. 77 ஓட்டங்களில் இந்தியா வெற்றி பெற்று, தொடர் தோல்விக்கு ஆறுதல் தேடிக்கொண்டது. இந்தியா தரப்பில் ரெய்னா 3 விக்கெட்டுகளும் குல்கர்னி, அஷ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

## புலிகளின் அச்சு...

மிகவும் உன்னிப்பாக இருக்கின்றோம்.

இராணுவ முகாம்கள் எதுவும் அகற்றப்படவில்லை. தேசிய பாதுகாப்பிற்கு எந்தவித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருப்பதாக அண்மையில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கைக்கு அமைய விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இருக்கின்றன. விடுதலைப்புலிகளின் புலனாய்வாளர்கள் இருக்கின்றார்கள். விடுதலைப்புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அவர்களின் புலனாய்வு பிரிவினரும் செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டனர். அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் அவர்களது செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். அது தொடர்பில் நாம் தீவிரமாக கண்காணித்து வருகின்றோம். எனினும் அவர்களினால் தேசிய பாதுகாப்பிற்கு எதுவிதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை. எனவும் தெரிவித்துள்ளார். (எ-11)

## 20ஆவது திருத்...

போது திருத்தப்பட்டு வருகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வசித்த வீட்டுக்கு இடமாறவுள்ளார்.

அந்த வீடும் தற்போது திருத்தப்பட்டு வருகிறது எனவும ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் வலுவடைந்து வருவதாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன,

அந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டுக்குரியது எனவும் அப்போது நாட்டின் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்சவும் பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய ராஜபக்சவும் இருந்தனர் எனக் கூறியுள்ளார். (எ-11)

**கடை வாடகைக்கு உண்டு**

பருத்தித்துறை நகரில் கடை வாடகைக்கு உண்டு.

(க-1396)

**தொடர்பு :**

**0774366704**

## வெள்ளைக்...

படையினருடன் இருந்தனர் என மலரவனின் மனைவி தெரிவித்தார்.

அத்துடன், "சரணடைவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன, நாங்கள் சரணடையப் போகின்றோம்" என தனது தந்தை தன்னுடன் இறுதியாகத் தொடர்பு கொண்ட போது கூறினார் என நடேசனின் மகன் கண்ணீருடன் சாட்சியமளித்தார்.

இலங்கை மீதான ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளிவரவுள்ள நிலையில், இவர்கள் இந்த சாட்சியங்களை அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## புலிகளின் நிதி வலை...

களத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாப்பய ராஜபக்ஷ சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மங்கள சமரவீர மேலும் குறிப்பிடுகையில்,

"சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தி, விடுதலைப் புலிகளின் நிதி ஆதார வலையமைப்புகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதற்காக இலங்கையுடன் முன்னர் இணைந்து பணியாற்றிய நாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதிலும், தீவிரவாத முறியடிப்பு மற்றும் நிதி ஆதார வலையமைப்புகளுக்கு எதிரான எல்லா நிபுணர்களுடனும் அரசாங்க முகவர் அமைப்புகள் நெருங்கிய உறவுகளைப் பேணி வருகின்றன.

அனைத்து வடிவங்களிலுமான தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் உறுதியாக இருக்கும் அரசாங்கத்தின் இந்தக் கொள்கை நிலையானதாக இருக்கும்" என்று மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கை 2014ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை என்றும், இவ்வறிக்கை சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் வலையமைப்பை தோற்கடிக்க மகிந்த ராஜபகஷ தலைமையிலான அரசாங்கம் தவறியுள்ளது என்பதை வெளிப்படுத்துவதாகவும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (எ-11)

## 8 பேரைக் கொலை...

வத்தின் ஐந்து உறுப்பினர்களுக்கு எதிராக சட்டமாஅதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பை அறிவித்த நீதிபதிகள் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால், இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினரை விடுதலை செய்வதாக தீர்ப்பளித்தனர்.

அதேசமயம், குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஐந்தாவது நபரான சுனில் ரத்னாயக்க என்னும் இராணுவ சிப்பாய்க்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

ஆனால், தான் இந்த குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கபதாகக் கூறிய சுனில் ரத்னாயக்க, தான் இந்த கொலைகளை செய்யவில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்..

அவரது கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறிய நீதிபதிகள், அவருக்கு இந்த வழக்கில் மரணதண்டனை விதிப்பதாக தீர்ப்பளித்தனர்.

இந்த தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக எதிர்தரப்பின் வழக்கறிஞர் தனராஜ சமரகோன் கூறினார்.

இந்த தீர்ப்பின் முலம் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு உள்நாட்டுக்குள் பலம் வாய்ந்த கட்டமைப்பொன்று இருக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக வழக்கில் அரச தரப்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன கூறினார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் நியாயமான் முறையில் விசாரணைகளை மேற்கொண்டதன் காரணமாகவே இந்த தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கு முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனை

"மனிதம் பேணுவோம், பண்பாடு காப்போம்"

இடம்: யாழ் - வீரசிங்கம் மண்டபம்

காலம்: 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

(C-1382)

## டுபாயில் வேலைவாய்ப்பு



டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் பின்வரும் வேலைத்தளங்களுக்கு 100 சுத்திகரிப்பாளர்கள் உடன் தேவை.

- எரிபொருள் நிரப்பு நிலையம்
- நவீன சந்தை
- இராணுவ முகாம்

அடிப்படைச் சம்பளம்: 900 Dhs (1 UAE Dhs = 36 SL. Rs)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-

1. தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
2. ஒப்பந்த காலம் 2 வருடங்கள். புதுப்பிக்கத்தக்கதாக இருக்கும்.
3. வேலைநேரம் 08 மணித்தியாலங்கள். வாரத்தில் 06 நாட்கள்.
4. ஒப்பந்தகாலம் முடிவடைந்த பின்னர் விமான ரிக்கட் வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
5. பிற அனைத்து விதிமுறைகளும் UAE தொழிலாளர் சட்டத்தின்படி வழங்கப்படும்.
6. வெளிநாடு செல்வதற்கான வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

இடம்:- Green Grass Hotel
இல.33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 27.06.2015 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.00 - மாலை 5.30 வரை
ஆவணங்கள்:- சுயவிபரக்கோவை, கடவுச்சீட்டு, புகைப்படம், கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

**Capital Recruitment International (PVT) LTD** No.130, 3/1, 3rd Floor, Grand pass Road, Colombo-14.
Email:-info@capitalri.com, capital colombo@gmail.com

(C-1381) Hotline:-075 750 4201, 011 2478 319, 011 2478 320 LLNo.2248

## விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

விஸ்டம்

இல.475, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (வண்ணார்பண்ணை சிவன் கோவிலடி)

A/L 2015 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான விசேட செயலமர்வு நிகழ்ச்சி நிரல்

காலம் : 26.06.2015

| நேரம் | பொறியியல் தொழில்நுட்பம் | உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் |
|---|---|---|
| 8.45 - 9.00 | செயலமர்வு ஆரம்பமும் அறிமுகமும் | |
| 9.00 - 10.30 | மின்னியல் - C.ரஞ்சித்குமார் | காலநிலைக் காரணிகள், பீடைகள், நீரின் தரம் - ம.விஸ்ணுதேவன் |
| 10.30 - 10.45 | தேநீர் இடைவேளை | |
| 10.45 - 12.30 | பொறிமுறை வரைபு C.ரஞ்சித்குமார் | மண், சக்தி நெருக்கடித் தீர்வு, உயிர்முறைகள் தொழில்நுட்பத்தின் விருத்தி – ம.விஸ்ணுதேவன் |
| 12.30 - 1.30 | மதிய போசன இடைவேளை | |
| 1.30 - 4.00 | இயந்திரத்தொழில்நுட்பவியல் செ.ஜெகநாதன் | இலத்திரனியல் - C.ரஞ்சித்குமார் பம்பிகள், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம், தாவரச் சுரப்புக்கள் - ம.விஸ்ணுதேவன் |

காலம் 27.06.2015

| நேரம் | பொறியியல் தொழில்நுட்பம் | உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் |
|---|---|---|
| 8.30 - 10.30 | குடிசார்தொழில்நுட்பவியல் P.சண்முகதாசன் | பண்ணைக் கட்டுமானம் - P.கிருபாகரன் |
| 10.30 - 10.45 | தேநீர் இடைவேளை | |
| 10.45 - 12.30 | இலத்திரனியல் - C.ரஞ்சித்குமார் | உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் - ம.விஸ்ணுதேவன் |
| 12.30 – 1.30 | மதியபோசன இடைவேளை | |
| 1.30 – 2.30 | முயற்சியாண்மையும் முகாமைத்துவமும் S.ரூபன் | இயந்திரப் பொறிநுட்பம் -க.ரவிக்குமார் |
| 2.30 - 4.00 | குடிசார்தொழில்நுட்பவியல் - P.சண்முகதாஸ் | ஆளுகைக் கட்டமைப்பு, தரமான நடுகைப் பொருட்கள், தரையலங்காரம், தாவர இனப்பெருக்கம் - ம.விஸ்ணுதேவன் |

காலம் 28.06.2015

தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்

| | |
|---|---|
| 08.30 – 10.30 | உயிரியல், இரசாயணவியல் - A.அரவிந்தன் |
| 10.30 – 10.45 | தேநீர் இடைவேளை |
| 10.45 – 12.30 | கணிதம் - P.விமலநாதன் |
| 12.30 – 01.30 | மதிய போசன இடைவேளை |
| 01.30 – 02.30 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - S.மயூரதாஸ் |
| 02.30 - 04.00 | பௌதிகவியல் - A.அரவிந்தன், C.ரஞ்சித்குமார் |

மாணவர்கள் வரும் போது உபகரணங்கள் அடங்கிய உபகரணப் பெட்டி கொண்டுவருதல் வேண்டும்.

கட்டணம் அறவிடப்படும்

தொடர்புகளுக்கு 0772487774

(C-1385)

தரம் தனித்துவம் உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு

## கிளி/ எடிசன் கல்லூரி BA வெளிவாரி பட்டப்படிப்பு

பதிவுகள் இன்றும் நாளையும் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது வைத்தியசாலை முன்பாக கிளிநொச்சி (C-1395)

தொடர்பு - 0775483470

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணனி அறிவு தெரிந்த வாடிக்கையாளர் சேவை முகவராக தொழிற்பட ஊழியர்கள் தேவை

(C-1386)

தொடர்பு : 0775385494

## G.A.Q B.A Part I,II யாழ் BA. (கலைமாணி முதலாம் ஆண்டு)

பேராதனைப் பல்கலைக்கழகம் புதிய பிரிவுகள் ஆரம்பம்

27.06.2015 சனி 9 am

போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள். சட்டக்கல்லூரி, கலாச்சார அலுவலர் பதவி, சாரதி பதவிக்கானது

பிரிவு - I சனி, ஞாயிறு 9.00- 11.00
II சனி, ஞாயிறு 3.30- 5.30

ஆரம்பம் - 27.06.2015 சனி 9 AM

மேலதிக தொடர்பு : 0772170065

(954)

ஐடியல் கல்லூரி - மானிப்பாய் கீறின் ஆஸ்பத்திரி பின் வீதி

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர் களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். M .Rajan (945)

தொடர்புகளுக்கு:-0772286054

## புவியியல் கருத்தரங்கு தொடர்

ஆரம்பம் 28.06.2015

(955) ஞாயிறு 1.00 மணி

P.S.குமரன்

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம் பதிவு செய்க.


# வெள்ளைக்...

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான காரியாலயத்தில் அமைந்துள்ள விசேட அறை ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, இது தொடர்பில் அவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் இறுதிக் கட்டப்போரின் போது இடம்பெற்ற வெள்ளைக்கொடி விவகாரத்தில் அரசாங்கம் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை தெரிவித்து வரும் நிலையிலேயே, வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் இவர்கள் இந்த சாட்சியத்தை வழங்கியுள்ளனர்.

இதன்போது விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களும், காயமடைந்த போராளிகளும் சர்வதேசத்துக்கு தெரிவித்ததன் பின்னர், வெள்ளைக்கொடியுடன் படையினரிடம் சரணடைந்த பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாக புலித்தேவனின் மனைவி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, படையினரிடம் எழிலன் உள்ளிட்ட பல போராளிகள் சரணடைவதை நான் நேரில் கண்டேன். போராளிகள், தளபதிகள் உட்பட்டவர்களின் அங்க அடையாளங்களை கூறியும், பெயர்களை சரியாக உச்சரித்தும், ஒவ்வொருத்தராக அழைத்தனர்.

தமிழை சரளமாக பேசக்கூடியவர்களும்

23ஆம் பக்கம் பார்க்க....


## BA பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு

- கடந்த காலங்களில் எம்மிடம் கற்றோர் 100% சித்தி பெற்றனர்.
- பதிவுக்கான இறுதி நாள் வரைகாத்திராது இன்றே பதிவினை எமது நிறுவனத்தில் மேற்கொள்ளவும்.
- A/L 3 பாடங்களும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- இன்று முதல் எமது நிறுவனத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

(952)

BEACON வெலிங்டன் சந்தி, யாழ்நகர்

## Microsoft Excel Solution



Data Analystics through Microsoft Excel
190 functions
கற்பிக்கப்படும்

Finance Excel
5 Months
140 functions
கற்பிக்கப்படும்

Advanced Excel
4 Months
120 functions
கற்பிக்கப்படும்

Basic Excel
3 Months
30 functions
கற்பிக்கப்படும்

(C-1382)

அலுவலகங்களில் அல்லது கடைகளில் Excel பயன்படுத்துபவர்கள் நாளாந்தம் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள் உட்பட சகல பிரச்சினைக்கும் இலகுமுறையில் தீர்வு காண்பதற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**Student Success Centre**

320, Main Street, Jaffna.

தொடர்புகளுக்கு- 077 616 9470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.